விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 29 சனிக்கிழமை (12.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 175

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

12 JUN 2010

இனப் பிரச்சினைக்குத் தீர்வு

# தமிழ்க் கட்சிகளை அழைத்து இந்திய மத்திய அரசு பேசும்

## திட்டம் தயாரிக்கிறார் சிவ்சங்கர் மேனன்

(டெல்லி)

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட இலங்கையின் சிறுபான்மை இனக் கட்சிகளை நேரடியாக அழைத்துப் பேச இந்தியா திட்டமிட்டுள்ளதாக பி.ரி.ஐ. செய்திச் சேவை தகவல் வெளியிட் டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் மேற்கொண்டுள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## பார்வதி அம்மாள் இந்தியா செல்ல விசா நிபந்தனைகள் தளர்த்தப்பட்டது

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் இந்தியாவில் வந்து தங்கியிருந்து மருத்துவ சிகிச்சை பெறும் வகையில் இந்திய மத்திய அரசு விசா நிபந்தனைகளை தளர்த்தியுள்ளது.

தமிழக அரசின் ஆலோசனை, அபிப்பிராயம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டே மத்திய அரசு இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

கடந்த மாதம் இந்திய அரசு அவருக்கு விசா வழங்கியிருந்தது. ஆனால் கடுமையான நிபந்தனைகளை முன்வைத்திருந்தது. குறிப்பாக அவர் வைத்தியசாலையில் மாத்திரம் தங்கியிருக்க வேண்டும். வெளியாட்களை சந்திக்கக் கூடாது. நெருக்கமான உறவினர்கள் கூட அரச (16ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவை கொன்று நானும் தற்கொலை செய்வேன்

### பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா சூளுரை

(கொழும்பு)

பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்த கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட படைத் தரப்பு முக்கியஸ்தர்களை காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் சரத் பொன்சேகா இறங்கினால், அவரைக் கொன்றுவிட்டுத்தானும் தற்கொலை செய்யப் போவதாக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கிரிபத்கொட பகுதியில் இடம்பெற்ற சரத் பொன்சேகாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இந்தத் தகவலை தெரிவித்தார்.

சர்வதேச நீதிமன்றத்தில், எமது நாட்டை காத்த வீரர்களை காட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கையில் (16ஆம் பக்கம் பார்க்க)



இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று மாலை நாடு திரும்பிய போது...

## ஜனாதிபதி தலைமையிலான எமது இந்தியப் பயணம் வெற்றியளித்துள்ளது



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தலைமையிலான குழுவினரின் இந்தியப் பயணம் எல்லா வழிகளிலும் வெற்றியளித்துள்ளதாக பராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று நாள் விஜயமாக இந்தியாவுக்கு சென்று நேற்று நாடு திரும்பினர்.

இவ் விஜயத்தில் ஜனாதிபதியுடன் இந்தியாவுக்கு சென்றிருந்தபராம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று கொழும்பிலிருந்தவாறு யாழ்ப்பாண பத்திரிகையாளர்களுடன் தொலைபேசி உரையாடலை நடத்தினார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்திய விஜயம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தலைமை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி நேற்று மாலை 4.15 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருளின் விலை இப்போது ஏறாது

(கொழும்பு)

எரிபொருளின் விலையை அதிகரிப்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உலக சந் (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா கென்யா செல்வது கோத்தபாயவின் கையில்

(கொழும்பு)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை கென்யாவில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் இடம்பெற இருக்கும் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத் தொடருக்கு அனுப்பலாமா? இல்லையா? என்பதை பாதுகாப்பு அமைச்சுத் தான் முடிவு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளில் ஒருவரான லக்ஷ்மன் குலுகல்ல இதனைத் தெரிவித்தார்.

இக் கூட்டத் தொடருக்குச் செல்ல பொன்சேகாவை அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கை இன்னமும் சபாநாயகரிடம் இருந்து கிடைக்கவில்லை என்றும் சபாநாயகரிடம் இருந்து கடிதம் கிடைத்ததும், சரத் பொன்சேகா கென்யாவுக்குச் (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. அறிவியல் நகரில் வடக்கு மாகாண சபை!

### ஆளுநர் ஆராய்வு

(திருகோணமலை)

திருகோணமலை வடக்கு மாகாண சபை அலுவலகத்தை கிளிநொச்சி அறிவியல் நகரில் ஆரம்பிப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆராய்ந்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடக்கு மாகாண சபை அலுவலகம் தற்போது திருகோணமலை வரோதயா நகரில் இயங்கி வருகிறது.

இந்நிலையில் வடக்கு மாகாண சபை அலுவலகத்தை வடக்கு மாகாணத்தின் மையப்பகுதியில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு (16ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தில் மோட்டார் சைக்கிள் ,முச்சக்கர வண்டி திருத்தும் பயிற்சி(ஒரு வருடம்)அலுமினிய கட்டுமானம், பியூட்டிசியன்,கணனி பிரயோகம், கணனி வன்பொருள் ஆகிய 6 மாதக் கற்கைநெறிகளும் யூலை மாதம் ஆரம்பமாகவுள்ளது.

NVQ தர தேசிய அரச அங்கீகார சான்றிதழ்களை வழங்கப்படவுள்ள இக்கற்கை நெறியில் இணைய விரும்புவோர் தமது பெயர் விலாசங்கள் ,கல்வித் தகைமை உள்ளடக்கிய சுயவிபரக் கோவையை தாமே தயாரித்து, மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை இல.375,கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறு மாவட்ட திட்டமிடல் இணைப்பாளர் இரா.அகிலன் கேட்டுள்ளார். (ந)


### மங்கள சேவை (திருமணத் தரகர்)

உள்ளன்புடனும் நேர்மையுடனும் செயற்படும் எம்மிடம் தங்கள் மணமகன், மணமகளுக்கு உள்நாடு, வெளிநாடு சாதிசமய வேறுபாடின்றி தங்கள் தகுதிக்கேற்ப தேடித் தரப்படும். நேரில் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகள் யாவும் இலவசம்.


தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இ.தெய்வேந்திரம்பிள்ளை J.p
42,நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தொ.பே.இல. 0771340071

(1673)


## மாணவன் டிலுக்சனின் மிருதங்க அரங்கேற்றம்



உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக் கழகத்தினதும் கலா வித்தகர் கிருபா அனந்த கோபனின் மாணவனுமாகிய செல்வன் ஸ்ரீதரன் டிலுக்சனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன், கலாநிதி ந.வி.மு. நவரட்ணம், ,ஓய்வுபெற்ற அதிபர் ஆ.சி.நட ராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளில் தரம் 11 மற்றும் தரம் 09 இல் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு சாவகச்சேரி வலயக்கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று தரம் 11ற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இச் செயலமர்வு நடைபெறும். (ந,9,29)


### மணமகள் தேவை

யாழ் இந்து ஆண் வயது 32 அனுசம் நட்சத்திரம். 4 இல் செவ்வாய் மூன்று சுற்றுக்கிரகபாவம் 29. உயரம் 5'8" B.Sc,M.Sc படித்த அரச உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மெல்லிய அழகான மணமகளும், யாழ்.இந்து ஆண் வயது 27 பூசம் நட்சத்திரம் செவ்வாய் தோசமற்ற மூன்று சுற்றுக்கிரக பாவம் 60. உயரம் 5'9" பிரான்ஸ் PR மணமகனுக்கு வயது 22 க்கு குறைந்த மெல்லிய அழகான படித்த மணமகளும் யாழ். இந்து ஆண் வயது 27 பூராடம்நட்சத்திரம் செவ்வாய் தோசமற்ற மூன்று சுற்றுக் கிரக பாவம் 20 உயரம் 5'5" கொம்பியூட்டர் கற்று லண்டன் ஸ்ருடன்ஸ் விசாவில் உள்ள மணமகனுக்கு நன்கு படித்த மெல்லிய அழகான மணமகள் வெளிநாட்டிலோ உள்நாட்டிலோ எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு :-
இ.தெய்வேந்திரம்பிள்ளை J.P
மங்கள சேவை
42, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 0771340071

(1673)



### மல்டிமீடியா ஸ்கொலர்ஷிப்

**MULTIMEDIA SCHOLARSHIP**

CSC Softview Visual Communication
ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE

Join the India's No.1 Animation Academy




**WIN 60 % SCHOLARSHIP**

- Digital Pre-Press
- Video Editing
- Web Animation
- Audio & Film Editing
- Graphic Design
- 2D & 3D Animation
- Visual Effects
- Cartoon Animation
- CBT Technology
- Mastering Multimedia

பரீட்சை June 26th & 27th சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

**மல்டிமீடியா புலமைப்பரிசில்**

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- மும்மொழிகளிலும் பரீட்சை
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே ,
- கலை,இலக்கியம்,திரைப்படத்துறை பற்றிய வினாக்கள்
- 60% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்

**ASIAN COMPUTER EDUCATION**

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677

கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-3734088



உங்களை உணருங்கள் 'ஜெய் குருதேவ்' அன்பில் மலருங்கள்



வாழும்கலை வழங்கும்

THE ART OF LIVING

### ஸ்ரீ ஸ்ரீ யோகா

14 வயதுக்கு மேல்

- உடல் எடைகுறைய வேண்டுமா?
- ஞாபக சக்தி அதிகரிக்க வேண்டுமா?
- உடல், உள உபாதைகளில் இருந்து விடுபடவேண்டுமா?

பயிற்சியில் கலந்து பலன்பெற
அனைவரையும் அன்புடன் அழைக்கிறது
வாழும்கலைக் குடும்பம்.

இடம்:கம்பன் கோட்டம் - நல்லூர்
காலம்: 12.06.2010 (சனிக்கிழமை)
நேரம்: மாலை 4.30 மணிக்கு
தொ.பே. 0777740593
0770474757

(1674)


# மரண அறிவித்தல்



## திருமதி பசுபதி விஜயலட்சுமி (சின்னக்கிளி)

கொட்டடி முத்தமிழ் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவரும் அனலைதீவை சேர்ந்தவருமான திருமதி பசுபதி விஜயலட்சுமி 09.06.2010 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னத்தம்பி ஐயம்பிள்ளை (அனலைதீவு) சின்னம்மா(கொட்டடி) தம்பதிகளின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான ம.சவரிமுத்து ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு பெறாமகளும் காலஞ்சென்ற ந.மாரிமுத்து, நாகமுத்து தம்பதிகளின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற மாரிமுத்து பசுபதியின் அன்பு மனைவியும் கனகராஜா (ரவி ஆசிரியர்), இரத்தினராசா(சேகர்) ஆனந்தராஜா(ஜோச்), சந்திரன், ஜெயக்குமாரி(ஜெயா), பிறேமகுமாரி(பிறேமா, முத்தமிழ்சிறுவர் பாடசாலை ஆசிரியை), விஜயகுமாரி(யாழினி), இராஜகுமாரி (ஜெசிந்தா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுமந்தா, சாந்த மனோகரி, சீ.செல்வம், க.தயாபரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிறோசன்,மௌனிசன், விபீசன், நபீனா, லவன்செயன், ரிசிகேஷன், துசிகேஷன் (க.பொ.த உயர்தரம் யாழ் மத்திய கல்லூரி), சிவதி(யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கனுசாந்(யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், மகாலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் க.பரமானந்தம் (ஆத்திசூடி வீதி), சு.நவரத்தினம் (காந்தி), அமரர்கள் சுபத்திரை(கொக்குவில்),கந்தசாமி மற்றும் பாலசிங்கம் வள்ளியம்மை அமரர் மணி, அமரர் புலேந்திரராஜா மற்றும் லீலா, கலா, தனபாலசிங்கம் (காசாளர், தெ.ப.கூ.சங்கம், யாழ்ப்பாணம்), வைரமுத்து, மகாலிங்கம், விசுவலிங்கம்,சின்ராசா ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் அமரர் சரஸ்வதி மற்றும் தங்கம்மா, அமரர் சிவராசா மற்றும் கனகசபை(சின்னண்ணை), கண்மணி, சற்குணம்(தேவி),பாக்கியம்(கோகிலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2010 நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11 முத்தமிழ் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 8017

தகவல்
குடும்பத்தினர்

(1676)

# இன்று ஒரு தகவல்

## குழந்தைகள்

ஒரு தகப்பனார் தன்னுடைய பிள்ளையைப் பார்த்து, "இதோ பாரப்பா.... நீ எப்பவும் உன்னைவிடப் புத்திசாலியான பிள்ளைகளிடம் சிநேகிதம் வைக்க வேண்டும். அதுதான் நல்லது" என்றார்.

உடனே அந்தப் பையன், "நீங்க சொல்லுவது சரிதானப்பா... ஆனால் என்னைவிட மோசமான பையன்களுக்கு ஒரு புத்திசாலிப் பையன், தேவையல்லவா? அதுதான் அந்தப் பையனாக நான் இருக்கிறேன்" என்றான்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் இந்தக் காலத்துப் பையன்களிடம் வாயைக் கொடுத்துவிட்டால் மீளுவது கஷ்டம்.

சின்னப்பிள்ளைகளிடமிருக்கும் இந்தப் புத்திசாலித் தனத்தை பெற்றோர் தூண்டி விட வேண்டும். அதை அமுக்கக் கூடாது.

அமெரிக்காவில் இளேடிஸ் கார்ட்னர் என்ற குழந்தை உளவியல் நிபுணர் இருந்தார்.

அவர் என்ன சொல்கிறார். என்றால் ....

குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிப்பது தான் நல்லது என்கிறார்.

உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள், " முளைச்சு மூணு இலை விடல்லை. அதற்குள்ள உனக்கு இவ்வளவு திமிரா? என்று கேட்கக் கூடாது.

சின்ன வயிதிலேயே பெரியவர்களை எதிர்த்துப் பேச விட்டு விட்டால் பின்னாடி அந்தக் குழந்தை கெட்டுப் போய்விடும் என்று நினைக்கிறது தப்பு.

அப்பாவுக்குத் தெரியாத ஒரு கணக்கை பிள்ளை சரியாகப் போட்டுவிடுகிறான்.

உடனே அந்த அப்பா அது தனக்கு அவமானம் என்று நினைக்கக் கூடாது. அதை விட பெரிய அவமானமெல்லாம் தாங்கிக் கொள்பவருக்கு பிள்ளை செய்தது தான் பெரிதாகப் போய் விட்டதா?

நம்ம பிள்ளை நம்மைவிடப் புத்திசாலியாக இருக்கிறானே என்று நினைத்து பெருமைப்பட வேண்டும்.

குழந்தை ஏதாவது உங்களிடம் சொல்ல விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்க வேண்டும்.

அது , தான் செய்த ஒரு காரியத்துக்கு, அல்லது செய்யப் போகும் ஒரு காரியத்துக்கு என்ன காரணம் சொல்கிறது என்பதை பரிவோடு கேட்க வேண்டும்.

சின்னப் பிள்ளை ஏதோ விளையாட்டுத் தனமாக பேசுகிறது என்று நினைத்துக் கொண்டு வேறெங்கேயோ கவனமாக இருக்கக் கூடாது.

குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்க வேண்டியது அவசியமென்று குழந்தை உளவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக அப்பாக்கள் கோபப்படக் கூடாது. அப்பாக்கள் பதில் சொல்ல முடியாத எவ்வளவோ கேள்விகள் இருக்கிறது இந்த உலகத்தில்.

ஒரு பையன் அவனுடைய அப்பாவைப் பார்த்துக் கேட்டான்: " அப்பா, ஒரு கல்லை கையிலிருந்து போட்டால் அது ஏன் தரையில் விழுகிறது?" என்றான்.

"புவியீர்ப்பு சக்திதான் அதற்குக் காரணம். கீழே இருக்கும் அந்த சக்தி கல்லை இழுக்கிறது, என்றார் அப்பா.

"இந்தச் சக்தி ஏன் மேலே இழுக்கக்கூடாது? எதற்குக் கீழே இழுக்கிறது? என்றான் பையன். அப்பா பார்த்தார்.

"அவசரமாக கொஞ்சம் வேலை இருக்கிறது. பிறகு பதில் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டு மெதுவாக நழுவிப் போய் விட்டார்.

பிள்ளைகளுக்கு பிரத்தியேகமாக சில சந்தேகங்கள் வரும். அதையெல்லாம் சமாளிப்பது கஷ்டம் தான். ஒரு வாத்தியார் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

அப்பொழுது வேடிக்கையாக சொன்னார்:

"மாணவர்களே! இந்த உலகம் ஒருநாள் அழியப் போகிறது. எரிமலை குமுறப் போகிறது. வானம் இடிந்து விழப் போகிறது." என்று வரிசையாக சொல்லிக் கொண்டு போனார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு மாணவன் எழுந்து, "சேர், அன்றைக்கு பள்ளிக்கூடம் இருக்குமா சேர்?" என்றானாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட உயர்தர பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தெண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த (உயர்/தர) தரம் 12 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கணித விஞ்ஞானம் மற்றும் வர்த்தக பாட பரீட்சையில் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் 30 மாணவர்களின் பெயர் விபரம் வெளிக்கள நிலை யத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

**தரம் -12**

**கணிதப்பிரிவு**

கே.தனீரோஜன் (உடுப்பிட்டி அ.மெ.மி கல்லூரி), எல்.உமைப்பிரியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.அரவிந் (ஹாட்லிக் கல்லூரி), கே.கமலவாசன் (உடுப்பிட்டி அ.மெ.மி கல்லூரி),

என்.பிரணவரூபன், பி.நிருசன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஜெ.நிலாஜினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஜெ.ஜெனதன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.விேனாதினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.பார்த்தீபன், கே.சுஜீவன் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.வர்மிளா (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),

எஸ். சுஜீவன், எஸ்.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), பி.ஜெயரூபன் (உடுப்பிட்டி அ.மெ.மி கல்லூரி), ஆர்.மிதனிஜி (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.கோபிகா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.றேயுனா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பி.இவான்ஸிங்லன் (உடுப்பிட்டி அ.மெ.மி கல்லூரி),

எஸ்.நிசாந்தினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எம்.திவ்யா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), ஆர். விதுசன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஜெ.வியுகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.மாயவன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.கஜேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி), ஆர்.நிரோஜன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி),

எஸ்.மதுரன் (உடுப்பிட்டி அ.மெ.மி. கல்லூரி), ஜெ.புவிவாதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.சிரலாதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), என்.பகீரதி (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எல்.டவினியா (உடுவில் மகளிர் கல்லூரி),

**உயிரியல் பிரிவு**

என்.வாகினி ,எஸ்.தர்மிகா (வேம்படி மகளிர் கல்லூரி), ஏ.நிசாந்தன் (சென். பற்றிஸ் கல்லூரி), ரி.நிசாந்தன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.கோகுலன், எஸ்.சிந்துசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எல்.ரஞ்சினி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.துசீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.பிரதீபன் (உடுப்பிட்டி அ.மெ.மி கல்லூரி), ஏ.அபிராமி (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.யோகினி, ஜெ.மைதிலி (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), ஜெ.பிரியவதனி, ப.ஸ்ரீதேவி (வேம்படி மகளிர் கல்லூரி), எம்.மதுர்ஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), என்.சோபினி (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எஸ்.தர்சினி (சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி), பி. ஆரணி (வேம்படி மகளிர் கல்லூரி), வி.விஸ்ணுபிரசாத் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.பகீரதன் (சாவகச் சேரி இந்துக் கல்லூரி), ஆர்.சாரதாதேவி (வேம்படி மகளிர் கல்லூரி), கே.கோபிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.விதுரன் (ஹாட்லிக் கல்லூரி), கே.லக்ஷனா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), வி.முருக தாஸ் (ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கலையுகன் (யாழ். இந்துக் கல்லூரி) எஸ்.சரிதா (யாழ்ப்பாணக்கல்லூரி), கே.ஜனிதா (வேம்படி மகளிர் கல்லூரி), எஸ்.கிருஸ்ரிஅன்ரோஜின் (சென். பற்றிஸ் கல்லூரி), எஸ்.செந் தூரன் (ஹாட்லிக் கல்லூரி),

**வர்த்தகப் பிரிவு**

எல். ஆரூரன் (யாழ். இந்துக் கல்லூரி),பி.வினோதா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி),எஸ்.கோகிலா (வட இந்து மகளிர் கல்லூரி),ஜி.மாதுரி (விக்டோறியாக் கல்லூரி) , ஆர்.உதஜனா (யாழ். இந்து மகளிர் கல்லூரி),ஜி.யூலிகெப்சியா (அருணோதயக் கல்லூரி), என்.அகலியா ,எம்.தனுசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி),பி.வெலோகன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே.சிவச்சந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி),கே.நிருபிகா (வேம்படி மகளிர் கல்லூரி), பி.சர்மிளா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஆர் வினோத் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.தர் மிகா (கொக்குவில் இந்துக் கல் லூரி), கே.தமிழ்மதி (மெதடிஸ்த மகளிர் கல்லூரி),ஆர்.கனாதரன், ஆர்.தர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி),ஏ.பிரியங்கா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), எஸ். லக்ஷனா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ப.லக்சிதா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி), ச.கஜானா (அச்சுவேலி மத்திய கல்லூரி),ரி சுதர்சினி (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), கே.தனுஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி),எம்.வேணுகனன் (உடுப்பிட்டு அ.மி.கல்லூரி), கே. கலையழகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.தயாளன் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே. சௌமியா, ஜெ.பானுஜா, கே.கீர்த்திகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), பி.சுவர்ணா (கொக்குவில் இந்துக் கல்லூரி). (6-4)

# இராசி பலன்

*12.06.2010*
*வைகாசி 29, சனிக்கிழமை*
*அமாவாசை பிற்பகல் 5.22 மணிவரை*
*ரோகிணி முற்பகல் 10.27மணிவரை*
*இராகுகாலம் 8.52-10.22 மணிவரை*
*சுபநேரம் 2.52-4.22 மணிவரை*
*நயினை நாகபூசனி அம்மன் கொடி, பொலிகண்டி கந்தவனம் கொடி, சரவணை நாகபூசணி அம்மை கொடி, உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கொடி , ஆனைக்கோட்டை சிறிகண்ணகி அம்பாள் கொடி , இருபாலை கட்டப்பராய் முத்துமாரி அம்மை கொடி , அமாவாசை விரதம், அமிர்த சித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | போசன சுகக் குறைவு, அதிக செலவு, விவாதம், காரியதாமதம். |
| இடபம் | வெகுமானம், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, அதிகபிரயாசை. |
| மிதுனம் | சோம்பல் நிலை, இடமாற்றம், பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| கடகம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், போசன நன்மை. |
| சிங்கம் | இஷ்ட சித்தி, தொழில் சிந்தை, பெரியோரால் மதிக்கப்படல், விருந்து பசாரம். |
| கன்னி | வேலைச்சுமை, பொருள் விரயம், பயந்த சுபாவம், புதிய முயற்சி. |
| துலாம் | ஆரோக்கியக் குறைவு, வாகன பயம், போசன சுகம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, பாராட்டு, நண்பர்கள் சந்திப்பு, தனவருவாய். |
| தனுசு | காரிய சித்தி, தனதானிய சேர்க்கை, விருந்துபசாரம், மனமகிழ்ச்சி. |
| மகரம் | புத்திரரால் கவலை, தொழில் மந்த நிலை, பணவிரயம், அஜீரண ரோகம். |
| கும்பம் | ரோகபயம், சுபசெலவு, கல்வியில் மேன்மை, முயற்சி தாமதம். |
| மீனம் | நற்கீர்த்தி காரிய நன்மை, தனவிருவாய், உறவினர் சந்திப்பு. |

வளவன்



# மின் தடைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை பிரதான வீதியின் வீதி அகலமாக்கும் பணிக்காக மின்கம்பங்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

இதனால் நாளை காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை புன்னாலைக்கட்டுவான் , அச்சுவேலி , புத்தூர் , ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சி முழுவதும் மின்சாரம் தடைப்படும் என சுன்னாக மின் பொறியிலாளர் தெரிவித்துள்ளார். (6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 140 |
| தக்காளி | 120 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 |
| கோவா | 80 | 100 |
| கரட் | 200 | 200 |
| பூசனி | 25 | 40 |
| புடோல் | 25 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 |
| பாகற்காய் | 100 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 |
| பயற்றங்காய் | 60 | 80 |
| லீக்ஸ் | 120 | 150 |
| பீற்றூட் | 110 | 90 |
| கறிமிளகாய் | 140 | -- |
| முருங்கைக்காய் | 400 | 400 |
| போஞ்சி | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50-60 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |


யாழ்.கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மனவள கலைப் பயிற்சிநெறி அண்மையில் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருள்நிதி சி.முருகானந்தவேல் உரையாற்றுவதையும் அருகில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் க.இலக்குமணன், இலங்கை மனவளக் கலைமன்ற செயலாளர் யமுனா மற்றும் மனவளக் கலைத் துணைப் பேராசிரியர் அருள்நிதி குழந்தைவேலு ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## 3மாத காலமாக செயற்படாமல் இருக்கும் மின்மாற்றி

(வேலணை)

கோப்பாய் மத்தியில் மானிப்பாய் வீதியில் அரச மருத்துவமனைச் சந்திக்கு அருகில் வடக்கின் வசந்தத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட புதிய மின்மாற்றி இன்னும் இயக்கப்படாமல் உள்ளது.

இம் மின் மாற்றியானது சுமார் 3 மாத காலத்துக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியான நிலையில் உள்ளது. இருந்தும் அதற்கான மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

தற்போது கோப்பாய்ப் பகுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் அம் மக்களின் முழுமையான பயன்பாட்டுக்கு போதுமானதாக இல்லை.

அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதுடன் குறைந்த வலுவான மின்சார விநியோகமும் வழங்கப்படுகிறது.

இதனால் மின்பயன்பாட்டாளர்கள் உட்பட விவசாயிகளும் பெரிதும் பாதிப்புக்குள்ளவதாக அறிய முடிகின்றது. சம்பந்தப்பட்டோர் இது குறித்து கவனத்தில் எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-22)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(கரவெட்டி)



இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகுக்கும் 45 உதைப்பந்தாட்ட லீக் அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக இன்று காலை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி அனுராதபுரம் நோக்கி புறப்படுகின்றது.

இன்று பிற்பகல் 3 மணியளவில் அனுராதபுர நகரசபை மைதானத்தில் நடைபெறவுள்ள இலங்கை விமானப்படை லீக் அணிக்கு எதிரான இரண்டாம் சுற்றுப்போட்டியில் இவ்வணி மோதவுள்ளது.

பருத்தித்துறை லீக் அணியில் தேசிய மட்டப் போட்டியில் விளையாடிய இரு வீரர்களான பிரேம்குமார், அமல்ராஜ் ஆகிய வீரர்களின் பலத்துடன் வடமராட்சியில் பல வருடங்களாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் அனுபவம் வாய்ந்த வீரர்களான அரவிந்தன், காண்டீபன் மற்றும் பாலகரன் ஆகியோரும் மற்றும் சிறந்த இளம் வீரர்களைக் கொண்ட அணியும் 3 பயிற்சியாளர்களான முகுந்தன், வசந்தராஜன், அனுராகாந்தன் லீக்கின் முகாமையாளரான கதிர் காமராஜ் லீக் செயலாளர் ரி.வரதராஜன் ஆகிய அணியினர் இன்று காலை அனுராதபுரம் நோக்கிப் புறப்படுகின்றனர். (6-24)

## திருமுறை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் திருநெறிய தமிழ் மறைக் கழக அறநெறிப் பாடசாலை நடத்தும் திருமுறை விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 3மணிக்கு கல்யாண மண்டபத்தில் ஆசிரியர் ச.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நிதி உதவிப் பணிப்பாளர் எம். ஜி.எம். காண்டீபன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வெளிவாரி அலகின் இணைப்பாளர் கே.சிவராசா கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராசா வழங்கவுள்ளார். (4)




## பயிற்சிப்பட்டறை

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள 20 தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளை நேய பாடசாலைகளின் அதிபர் மற்றும் இரு ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (6-19)

## அம்மா பகவான் ஆன்மீகப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினரால் நடத்தப்படும் அம்மா பகவான் ஆன்மீகப் பட்டறை நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் கனடா நாட்டில் அம்மா பகவானின் அருள் பெற்றவரும் பல ஹோமங்கள், பயிற்சிப் பட்டறைகள் , தியான வகுப்புக்கள் நடத்தியவரான ஆன்மீகப் பேரொளி திருவாளர் தி. நளேந்திரன்ஜியினால் அம்மா பகவானின் ஆன்மீக அருளுடன் கூடிய நான்கு மணி நேர ஆன்மீகப் பட்டறை நடத்தப்படவுள்ளது.

எனவே பக்தர்கள் இதில் தவறாது கலந்து கொண்டு அம்மா பகவானின் அருள் ஆசியையும் நயன தீட்சையையும் பெற்றுக் கொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6-4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு சப்பறத்திருவிழாவும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்வசமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (6)

# யாழ்.மாநகர அபிவிருத்திக்கு ரூ.200 மில்லியன் ஒதுக்கீடு


## மக்கள் பங்கேற்பு அவசியம் என்கிறார் முதல்வர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத்திட்டம் (NELSIP) மூலம் யாழ். மாநகர அபிவிருத்தி திட்டத்திற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழிலில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுதலுக்கேற்ப ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 200 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ். மாநகர முதல்வரின் தலைமையில் அவரது வழிகாட்டலுடன் மாநகர பிரதேசத்தின் 23 வட்டாரங்களும் 9 கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு மக்கள் பங்கேற்புடன் குறித்த கொத்தணிக்கான பிரச்சினைகள் இனங்காணப்பட்டு திட்டவரைபு தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே மக்கள் பங்கேற்புடனான சமூக அபிவிருத்தித் திட்டத்தினை சிறந்தமுறையில் தயாரிக்க அங்கத்தவர்கள், யாழ்.மாநகர உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் நேரிய சிந்தனையுடன் இவ் அபிவிருத்திப் பணியில் இணைந்துகொள்ளுமாறு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா கேட்டுள்ளார். (ந-5)




வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் கல்வி பயிலும் கண்பார்வை பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவருக்கு லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசா கண்ணாடியை வழங்குவதையும் அருகில் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவனின் தாயார் மற்றும் பிரமுகர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:- நல்லூர் செய்தியாளர்)

# நாட்டில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

## வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறல்

(கொழும்பு)

நாட்டின் அநேகமான பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை நிபுணர் தெரிவிக்கையில், வங்காளவிரிகுடாவில் வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக தென் மேல் பருவபெயர்ச்சி காற்றானது தீவிரமடைந்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதுடன் மத்திய மலைநாட்டில் மலைத் தொடர்களின் மேற்குப் பகுதிகளில் 80 கி.மீ மணித்தியாலம் வரை காற்றின் வேகம் காணப்படும்.

மேல்மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தில் அவ்வப்போது மழைபெய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு,கிழக்கு,வடமத்திய,ஊவா மாகாணங்களில் இடி யுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் சுற் றியுள்ள கடல்பகுதியும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் மீனவர்கள் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படும் முன்னறிவித்தலைக் கட்டாயமாக செவி மடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதேவேளை நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிவரை 29.6மி.மி மழை பதிவாகியுள்ளது என திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (6)

## கடும்மழை,இடி முழக்கத்தால் ஆலய மேற்பகுதி சேதமடைந்துள்ளது

(குருநகர்)

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தில் அமைக்கப் பெற்றுள்ள மீன் சின்னம் மற்றும் டோமில் மேற்பகுதியில் அமைக்கப்பெற்ற குருசு என்பன இடியினால் சேதமடைந் துள்ளது.

இடியின் சத்தத்தால் சூழவுள்ள பொது மக்கள் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தனர்.

மேலும் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் கடற்கரை வீதியை அண்டிய பகுதிகளிலுள்ள குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-39)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் யூன் மாதம் 15 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதேபோன்று மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிலையங்களிலும் டெங்கு ஒழிப்புச் சுத்திகரிப்பு பணி இடம்பெற வேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் கல்வி நிலையங்களில் சிரம தானப் பணிக்காக மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது எனவும் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் தமது செலவில் சுத்திகரிப்புப் பணிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அதனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்பார்வை செய்யவுள்ளார்கள் என்றும் இப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்காத தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (6)

## மீள்குடியமர்வு தொடர்பான அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் வசித்து வரும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகல கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேசங்களில் நீக்கம் செய்து மீளக்குடியமர்வுக்காக எதிர்வரும் 21, 22 ஆகிய இரண்டு நாட்களும் கிளி/தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வருகை தந்து தங்களது மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் இதேபோன்று கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட வட்டக்கச்சி, சிவிக் சென்ரர், மாயவனூர், மாவ டியம்மன், இராம நாதபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீளக் குடியமர்வுக்காக 22 ஆம் திகதியன்று கிளி/இராம நாதபுரம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வருகை தந்து தங்களது மீளக் குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (6)

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் 100 வீடுகள் நிர்மாணம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் முதற்கட்டமாக நூறு நிரந்தர வீடுகளை நிர்மாணிப் பதற்கான பணிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 50 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா படி வீடுகளை அமைக்கும் பணிகளை ஆரம்பிக்கவென நேற்று முன்தினம் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நூறு வீடுகளும் கரைச்சி பிரதேச செயலகப் பிரி விலுள்ள விவேகானந்தநகர் ,ஆனந்தபுரம் ,கணேசபுரம் ஆகிய நகர்களில் அமைக்கப்படவிருப்பதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (6-4)

## இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பிலான கலந்துரையாடல்

### அமைச்சர் ரிஷாட்,ஈரான் தூதர் சந்திப்பு

(புத்தளம்)

கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீனை இலங்கைக்கான ஈரான் நாட்டு தூதுவர் நஹீமி ஜோர்ஜி நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் ஈரான் நாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் சாதகமான சூழ்நிலை குறித்து இரு தரப்புக்களுக்குமிடையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் செப்ரம்பர் மாதம் ஈரான் நாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீனிடத்தில் சுட்டிக்காட்டிய ஈரானிய தூதுவர் ஈரான் நாட்டு இணை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக இம்முதலீட்டாளர்கள் இருப்பதாகவும் கூறினார்.

அதேவேளை ஈரான், இலங்கை உறவுகளை வலுப்படுத்த இருதரப்பு வர்த்தகம் கைத்தொழில் மற்றும் வணிகத் துறைகள் மிகவும் முக்கிய இடத்தை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் தூதுவரிடத்தில் எடுத்துரைத்தமை குறிப்பிடத்தக்கது. (6)


## பொதுக்கூட்டம்

(நல்லூர்)


இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலை மையில் யாழ்.மாவட்ட கிளை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும் புத் தேசிய தலைமையகத்தின் தேசியச் செயலாளர் கலந்து கொண்டு மாவட்டக் கிளையின் கட்டட அமைப்பு ,பிரிவுக் கிளையின் கட்டட அமைப்பு ,அபிவிருத்தி விடயங்கள் பற்றி கலந்துரையாடவுள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கிளையின் ஆளுநர்சபை உறுப் பினர்கள், பிரிவுக் கிளைகளின் தலைவர்கள், செயலா ளர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (6-134)







கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளி பாடசாலைக் கட்டடங்களை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் பிரதிப் பிரதம செயலாளர் எஸ்.இராசநாயகம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், ஏனைய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# கௌரவிப்பு விழா

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவ கச்சேரி பிரிவினால் சங்கத் தொண்டர்கள் , உறுப்பினர்களை கௌரவிக்கும் விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மீசாலை திருப்புகழ் மண்டபத்தில் பிரிவின் தலைவர் செ. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி புளோரன்ஸ் ஜில்லட் , சிறப்பு விருந் தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், இலங் கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் தலைவர் வி.கே. கணேசலிங்கம் , கௌரவ விருந்தினர் களாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட கிளையின் உபதலைவர் லயன் வைத்திய கலாநிதி வை. தியாகராசா, கிளை யின் செயலாளர் கு. பாலகிருஸ்ணன் ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-134)

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை இரவு முத்துச்சப்பறமும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு கைலைக் காட் சியும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை சிவபூசை கைலைக்காட்சியும் இரவு திருமஞ்சமும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் விசேட கருடசர்ப்ப பூசையும் வாயுபட்சணி நாகம் வீதியுலாவும் இரவு பூந்தண்டிகையும் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 24 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் கைலைக்காட்சியும் இரவு சப்பறமும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 9.30 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக் கிழமை காலை தீர்த்தோற்சவமும் இரவு திருவூஞ்சல் மற்றும் கொடியிறக்கமும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு தெப்போற் சவமும் நடைபெறவுள்ளது. (6-4)

# எயார் இந்தியா அலுவலக திறப்பு விழா

எயார் இந்தியா அலுவலகம் எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இல.47 14/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரியில் திறந்து வைக்கப் படவுள்ளது. (6)

# இசைக்கலைவிழா

கைதடி மேற்கு அருள்மிகு ஞான வைரவர் தேவஸ்தான திருப்பணிக்காக இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவுடன் சுகுமார் இசைக்குழுவின் இசைக் கலை விழா இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சரஸ்வதி கலை அரங்கில் இடம்பெறவுள் ளது என தேவஸ்தான பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (6)

# பொதுக்கூட்டம்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மாகாண சபையின் வருடாந்த விசேட பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சன் மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புதியகட்சி ஆரம்பித்தல் அதனை பதிவு செய்வதற்கான நடவடிக்கை, புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல், பத்திரிகை வெளியீடு போன்ற விடயங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (6-134)

# ஒரு தொகுதி மருந்து வகை இந்தியாவிலிருந்து இறக்குமதி

இந்தியாவிலிருந்து மேலும் ஒரு தொகுதி மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்பட் டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள் ளது.

இந்த மருந்துவகைகள் எதிர்வரும் வாரமளவில் நாட்டிற்கு வந்தடையவுள்ளதாக சுகாதார அமைச்சின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மருந்துத் தட்டுப்பாடு நிலவும் அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்துவகைகள் 90 சதவீதம் விநியோகிக் கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மருந்து வகைகள் தேவைப்படும் வைத்தி யசாலைகளின் விபரங்கள் அமைச்சிடம் உள்ளதாக தெரிவித்த சுகாதார அமைச்சின் ஊடகச் செயலாளர் எதிர்வரும் வாரமளவில் பெறப்படும் மருந்துவகைகள் குறித்த வைத்தி யசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என வும் தெரிவித்தார். (6-4)





கட்டுரைப் போட்டி

பயன்தரு பல்சுவை அம்சங் களுடன் வெளிவந்துள்ள வரை மாசிகை -5 இல் இடம்பெற்றுள்ள கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு பரிசில்களை வெல்லுங் கள். விபரம் வரை மாசிகை -5 இல் உள்ளது. 'வரை' மாசிகையினை பிரபல புத்தக நிலையங்களிலும் அல்லது 'வரை' முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.


பரிசு ரூபா 10,000/-


மேலதிக தொடர்புகளுக்கு (0776701661, 0777281158)

(1672)









கிளிநொச்சி மகா வித்தியாலய புதிய மாடிக் கட்டட திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் அரசியல் பிரமுகர்கள் அழைத்து வரப்படுவதையும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ மற்றும் மாணவி ஆகியோர் இணைந்து கட்டடத்தைத் திறந்துவைப்பதையும் கணனி தொடர்பான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதையும் வடமாகாண ஆளுநர் மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்குவதையும் அருகில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

# வடக்கு-கிழக்கு மாகாணங்களில் துரித அபிவிருத்திப் பணிகள்

## அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு



வடக்கு -கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அம் மாகாணங்களில் தற்போது இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகளுடன் அப்பிரதேச பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்,அப்பாடசாலை மாணவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மன்னார்-நானாட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,


வடக்கு -கிழக்கு மக்களுக்கு மட்டுமன்றி முழு இலங்கையர்க்கும் தற்போது சேவை செய்யக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

தற்போது வடக்கு- கிழக்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கும் தெளிவான சுதந்திரம் கிடைத்துள்ளது.சமாதானம் ஏற்பட்டுள்ளது.அதேபோல துணிவும் திறமையும் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் கீழ் நாட்டில் துரித அபிவிருத்தியை மேற்கொண்டு வரக்கூடிய சக்தியுள்ள அரசும் நாட்டில் உள்ளது.

எனக்கு வழங்கப்பட்ட பதவியினைக் கொண்டு எமது மக்கள் மட்டுமன்றி முழுநாட்டு மக்களுக்கும் முடியுமான சேவையை வழங்கக் காத்திருக்கின்றேன் என்றார். (6-4)

# ஐ.தே.க தலைமைத்துவத்திலிருந்து ரணிலை ஏன் நீக்கமுடியாது

## நவீன் திஸாநாயக்க எம்.பி கேள்வி



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கும் அதிகாரத்தை ஏன் கட்சியின் செயற் குழு பயன்படுத்த முடியாது என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினருமான நவீன் திஸாநாயக்க கேள்வியெழுப்பினார்.

கொழும்பு இணையத் தளத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

ரணில் விக்கிரமசிங்கவை தலைமைத்துவப் பதவியிலிருந்து நீக்குவதற்கான அதிகாரம் கட்சியின் மேற்படி செயற்குழுவுக்கு இருப்பதாகவும் நவீன் திஸாநாயக்க சுட்டிக் காட்டினார். (6-4)

# இஸ்ரேலின் ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரமான ஆயுத வலுவைக் கொண்டுள்ளதான இஸ்ரேல் சர்வதேசத்துக்கு அச்சுறுத்தலாக விளங்கிக் கொண்டிருக்கிறது.இஸ்ரேலின் ஏகாதிபத்தியம் பலவீனப்படுத்தப்படும் போது தான் உலக சமாதானம் உறுதிப்படுத்தப்படும்.

அதற்கேற்ற வகையில் எமது நாட்டின் செயற்பாடுகளும் அமைய வேண்டும் என்று ஆளும் கட்சி எம்.பியான வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

காசா சர்வதேச கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த துருக்கியைச் சேர்ந்த நிவாரணக் கப்பல் மீதான இஸ்ரேலின் தாக்குதல் தொடர்பில் ஏ.எச்.எம் அஸ்வர் எம்.பி.யினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை ஆதரித்து உரையாற்றுகையிலேயே வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நிவாரணக்கப்பல் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் இஸ்ரேல் சர்வதேசம் பேணி வருகின்ற நாகரிகத்தை எட்டி உதைத்துள்ளது.

அத்துடன் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளையும் உலக நாடுகள் மத்தியில் தனது ஏகாதிபத்தியத்தையும் பிரயோகித்து வருகிறது. இஸ்ரேலின் நடவடிக்கைகள் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இதனை சர்வதேசமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

இஸ்ரேலின் ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட வேண்டும். அப்போது தான் உலக நாடுகளின் சுதந்திரமும் சமாதானமும் நிலை பெறக்கூடியதாக அமை யும் என்றார். (6-4)

# புதியதொரு அமைப்பை உருவாக்க புலிகளின் சர்வதேச வலைப்பின்னல் முயற்சி

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

சர்வதேச நாடுகளில் விஸ்தரித்துள்ள விடுதலைப்புலிகளின் வலைப்பின்னலினால் இலங்கையின் பாதுகாப்பிற்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே உள்நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்தி படைகளை உசார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் புலிகளின் சர்வதேச வலைப்பின்னல் ,இலங்கையில் புதியதொரு அமைப்பை உருவாக்க செயற்பட்டு வருகின்றது என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுள்ளது என்பதற்காக உள்நாட்டின் பாதுகாப்பு 100 வீதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கருத முடியாது.மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்காதவாறு வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் முகாம்களை பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சேனப்புரம் புனர்வாழ்வு நிலையத்திலுள்ள முன்னாள் போராளிகளை சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே பாது காப்புச்செயலாளர்கோத்தபாயராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (6-4)

# 12.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1429-நூற்றாண்டுகள் போர்:ஜோன் ஒஃப் ஆர்க் தலைமையில் பிரெஞ்சு இராணுவம் ஆங்கிலேயரிடம் இருந்து ஜார்கூ என்ற இடத்தைக் கைப்பற்றினர்.
- 1775-மெரிக்கப் புரட்சிப் போர்: பிரித்தானிய இராணுவத் தளபதி தோமஸ் கேஜ் மசாசுசெட்சில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார்.தமது ஆயுதங்களை கீழே வைக்கும் அனைத்துக் குடியேற்றக்காரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பதாக அறிவிக்கப்பட்டது.
- 1830-34,000 பிரெஞ்சுப் படைகள் அல்ஜீரியாவை அடைந்ததில் இருந்து பிரெஞ்சுக் குடியேற்றம் அந்நாட்டில் ஆரம்பமாகியது.
- 1898-பிலிப்பைன்ஸ் ஸ்பெயினுடன் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1899-ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 117 பேர் கொல்லப்பட்டனர்.
- 1902-அவுஸ்திரேலியாவின் நான்கு மாநிலங்களில் பெண்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.அவுஸ்திரேலியப் பழங்குடிகள் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- 1934-பல்கேரியாவில் அரசியற் கட்சிகள் தடை செய்யப்பட்டன.
- 1935-பொலிவியாவிற்கும் பராகுவெயிற்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டு மூன்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1940-இரண்டாம் உலகப் போர்: 13,000 பிரித்தானிய மற்றும் பிரெஞ்சுப் படைகள் பிரான்ஸில் ஜேர்மனியரிடம் சரணடைந்தனர்.
- 1943-நாசி ஜேர்மனியர் மேற்கு உக்ரைனில் 1,180 யூதர்களைப் படுகொலை செய்தனர்.
- 1967-சோவியத் ஒன்றியம் வெனேரா 4 விண்கலத்தை வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது.வேறொரு கோளின் வளிமண்டலத்துள் சென்று தகவல்களைப் பூமிக்கு அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1987-மத்திய ஆபிரிக்கக் குடியரசின் முன்னாள் பேரரசர் ஜீன்-பெடல் பொக்காசாவுக்கு அவரது 13 ஆண்டுகால ஆட்சியில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக மரணதண்டனை அறிவிக்கப்பட்டது.
- 1990-ரஷ்யக் கூட்டமைப்பின் நாடாளுமன்றம் சோவியத் ஒன்றியத்தில் இருந்து ரஷ்யாவின் விடுதலையை முறைப்படி அறிவித்தது.
- 1991-போரிஸ்யெல்ட்சின் ரஷ்யக் குடியரசின் அதிபரானார்.
- 1991-மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் 65 தமிழர்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1999-நேட்டோ தலைமையிலான ஐ.நா.அமைதிப்படை கொசோவினுள் நுழைந்தது.
- 2003-தமிழர் விடுதலை இயக்கம் என்ற அமைப்புக்குத் தமிழக அரசு தடை விதித்தது.
- 2005-அருளானந்தம் சுரேஸ்ஜோக்கிம் ten bin bowling என்ற விளையாட்டினை ரொரண்டோவில் உலக சாதனைக்காக 100 மணித்தியாலங்கள் தொடர்ந்து விளையாடி தனது முப்பதாவது கின்னஸ் உலக சாதனையினை நிலைநாட்டினார்.
- 2006-கூகுள் எர்த், லினக்ஸ் பதிப்பு வெளியிடப்பட்டது.

### பிறப்புகள்

- 1924-ஜோர்ஜ் டபிள்யு.புஷ்,அமெரிக்காவின் 41 ஆவது குடியரசுத் தலைவர்.
- 1932-பத்மினி,தென்னிந்திய திரைப்பட நடிகை(இ.2006)
- 1942-பேர்ற் சக்மன்,நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய உடற்றொழிலியலாளர்.
- 1957-ஜாவெட் மியன்டாட்,பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாளர்.

### சிறப்புநாள்

- பிலிப்பைன்ஸ்-விடுதலை நாள்,உலகக் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு நாள்.
- ரஷ்யா-ரஷ்ய நாள்(1990)


**1964- தென்னாபிரிக்க நீதிமன்றம் நெல்சன் மண்டேலாவுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்தது.**



# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

10-XX



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**கோரை என்னும் ஒருவித்திலை களை**

நெல் வயல்களிலே தவிர்க்க முடியாத களையாக கோரை இருக்கின்றது. எந்த போகத்தில் நெல் விளைவித்தாலும் இக் களையினது ஆதிக்கம் அதிகமாகவே இருக்கும். இதனால் நெல்லும் கோரையும் ஒன்றுடனொன்று இணைந்து வளர்வதாகவே கருதலாம். அதே நேரத்தில் நெல்லுக்கு இடப்படும் பசளைகளின் கணிசமான அளவு நெல்லை விட கோரையினாலேயே அகத்துறுஞ்சப் படுகிறது. பூக்கும் காலம் வரை நெல்லையும் கோரையையும் பிரித்தெடுப்பது சற்றே கடினமான காரியம்.

கோரை நிலத்துக்குள் முடிச்சு முடிச்சாக கிழங்குகளை உருவாக்கி அதில் உணவைச் சேமித்து இலைப் பகுதி தண்டுடன் மாத்திரம் வெளியே தெரியும் வண்ணம் வளரும். குறித்த காலத்தில் பூந்துணர் வெளியே வரும் போது இதனை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளலாம்.

இதனை வைத்துக் கொண்டே பல இனங்களை கோரை வகைகளாக இனங்கண்டு கொள்வர். முடிச்சுக் கோரை, சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை என பல இனங்களுண்டு.


***விவசாயத்தில் களையானது சுதேச மருத்துவத்தில் மூலிகையானது.***

இத்தனைக்கும் கோரையை அதி தீவிர களையாகவே விவசாய் செய்கையில் காண்கிறோம். அழிக்க அழிக்க மீண்டும் முளைத்து வரும் இக்களையைக் களைவதில் விவசாயப் பெருமக்கள் களைத்தே விட்டனர். அந்தளவிற்கு இக்களையினது தப்பிப் பிழைக்கும் ஆற்றல் இருக்கின்றது.

பொதுவாக விளைநிலத்தில் செய்யப்படும் களை பிடுங்குதல் மற்றும் களையகற்றுதல் செய்கைகள் மூலம் முழுமையாக இக்களையை அகற்றிவிட முடிவதில்லை. இவையனைத்திற்கும் காரணம் இக் களை உருவாக்கியிருக்கும் நிலக்கீழ் கிழங்குகள் ஆகும். இக்கிழங்கும் மேற்பரப்பிலிருந்து 45-60 செ.மீ வரை ஆழத்தில் இருக்கக் கூடியதாக இருப்பதுவும் இங்கொரு முக்கியமான காரணம். களை பிடுங்குதலின் போது இக் கிழங்குகள் எந்த விதத்திலும் பாதிக்கப் படமாட்டா. அதனால் இக் கோரையை புழுதி உழவின்போது ஆழ உழுது கிழங்குகளை அகற்றிவிடுவர். கோரைக் கிழங்கு முழுமையாக அகற்றப்பட்டாலன்றி இதனைக் கட்டுப்படுத்துவது சுலபமல்ல.

**கிழங்குகள் மூலிகையாகி மருந்தாக**

சுதேச வைத்தியர்களுக்கு கோரைக் கிழங்கு முக்கியமான ஒரு மூலிகையாகும். அங்குமிங்குமாக தேடி சேகரித்து மருத்துவத்திற்குப் பயன்படுத்துவர். மேலே கூறியது போல புழுதி உழவின் போது கிழங்குகள்



அகற்றப்படும் போது அவற்றை சேகரித்து பாதுகாத்து வைப்பர். ஆக மொத்தத்தில் விவசாயத்தில் களையாகி எப்படியும் அகற்றி விட வேண்டும் என விவசாயி முனையும் போது அவற்றின் கிழங்குகளைச் சேகரித்து



cyperus iria

செல்லும் சுதேச வைத்தியர் மருந்தாக பயன் படுத்தும் விந்தை இங்கே நடைபெறுகின்றதல்லவா!

**களை நாசினி கோரைக்கிழங்கில் செறிவடையும் சாத்தியம்**


கோரையைக் கட்டுப்படுத்த முழுமையாக களைநாசினியான கிளைபோசேற்று அல்லது றவுண்டப் பயன்படுத்துவதுண்டு. ஊடு புகுந்து தாக்கவல்ல இதுபோன்ற களை நாசினிகளைப் பயன்படுத்தும் போது அவை இலையினூடாக அகத்துறிஞ்சப்பட்டு கிழங்கிற்கு சென்று அதனுள் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும். கோரைக் கிழங்கை களை நாசினி விசிறிய பின் உடனடியாக சேகரிக்கக் கூடாது. நாசினி எதுவென்றாலும் குறிப்பாக ஊடு புகுந்து தாக்கும் களைநாசினிகளை முன்னதாகவே பயன்படுத்த வேண் டும். இதனை கவனிக்கத் தவறின் மருந்துக்காகப் பயன் படுத்த முனையும் கோரைக் கிழங்கில் களை நாசினி நஞ்சு செறிவடைந்திருத்தலை தவிர்க்க முடியாது போய்விடும்.

பராகுவாட் எனப்படும் (Herbicide களை நாசினி அல்லது weedicide) தொடுகை மூலம் களைகளைக் கட்டுப்படுத்தும் திறனுடையதனால் குறிப்பாக இருவித்திலை களைகளைக் கட்டுப்படுத்தவே சிறந்தது. கோரையைக் கட்டுப்படுத்துவதாயின் கோரைக் கிழங்கைப் பாதிக்கும் எதுவிதமான களை நாசினியே அதிகம் பயன்படுமாதலால் பராக்குவாட் எனும் தொடுகை மூலம் (Contact) செயற்படும் களைநாசினி கட்டுப்படுத்தாது.

விவசாய செய்கையில் களை யாகி முதன்மைப் பயிருடன் போட்டியிடும் கோரையை மேலே குறிப்பிட்ட வழிகளனைத்தையும் ஒன்று சேர்த்து பயன் படுத்தினால் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும் என்பதனைக் கவனிக்குக.

**ஒருங்கிணைந்த முகாமைத்துவம்**

நெற் செய்கையில் இதுவரையும் குறிப்பிட்ட பூச்சிப் பீடைகள் நோய்கள் , களைகள் என பீடைகள் ஒரு பக்கமிருப்பினும் நன்மை தரும். உயிரினங்களும் நிறையவே உண்டு. நெல்வயலில் முதன்மை இரை கௌவியாக சிலந்திகள் காணப்படும். சிலந்திகளும் அவற்றின் வலைகளும் அதிகமாக இருக்கும் நெல் வயலில் பூச்சிப் பீடைகள் தாமாகவே கட்டுப்பாட்டினுள் இருக்கும் என்பார்கள். சிலந்திகளுடன் தும்பி ,ஊசித்தட்டான் , லேடிபேட் வண்டுகள் போன்ற இரைகௌவிகளும் நெல்வயலில் காணப்படும். இதில் தும்பி ,ஊசித் தட்டான் போன்றவற்றின் இளம்பருவங்கள்



cyperus rotunds

நீரில் காணப்பட்டு நீருக்குள்ளிருக்கும் பீடைகளின் பருவங்களை உணவாக்கும் திறனுடையவை. இவ்வாறாக விவசாயிக்கும் விவசாயத்திற்கும் நன்மை தரும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் பீடைகளில் நோயாக்கிகள் போன்றனவற்றின் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதோடு தேவையற்ற பீடை நாசினிப் பிரயோகத்தை இயன்றளவு தவிர்த்துக் கொள்வதும் சிறந்தது.

***தொடர்ந்து விவசாயப் பெரு மக்களின் வேண்டுதலுக்கிணங்க வெங்காயச் செய்கையில் பீடைகள் பற்றியும் அவற்றினது முகாமைத்துவம் பற்றியும் ஆராய்வோம்.***

(தொடரும்)

# நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் மின்சாரம்

## பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குள் நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு விடும். அதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இந்தியாவுடனும் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாக பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வுகளின் பிரதான நடவடிக் கைகளின் பின்னர் சர்வதேச தொலைத் தொடர்புகள் வரி மீதான திருத்தச் சட்ட மூலம் தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே பிரதி நிதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ,

இலங்கையைப் பொறுத்தவரையில் தொலைத் தொடர்பு வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் தொலைபேசி இணைப்பு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டிய சூழல் காணப்பட்டது. ஆனாலும் அந்த நிலை இன்று முற்றிலும் மாற்றமடைந்துள்ளது. ஏனெனில் தொலைத் தொடர்புத்துறையில் ஏற்பட்டுள்ள போட்டித் தன்மை இதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது.

இன்றைய நவீன உலகில் தொலைத் தொடர்புகளை உள்நாட்டில் மேலும் முன்னேற்றமடையச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அது சாத்தியப்படுத்தப்பட வேண்டுமானால் அந்தத் துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது அறவிடப்படுகின்ற வரிகளை குறைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

வாகனங்களுக்கான வரிகளை குறைத்தல் தொடர்பில் இங்கு கேள்வியெழுப்பப்படுகின்றது. விமர்சிக்கப்படுகின்றது. இருப்பினும் வாகன வரி குறைக்கப்பட்டதால் அதன் இறக்குமதி அதிகரிக்கும். வாகன இறக்குமதி அதிகரித்தால் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு இயலுமை ஏற்படுகின்றது.

இந்நாட்டில் தற்போது 20 மில்லியன் சனத்தொகை கணிப்பிடப்பட்டுள்ள நிலையில் இங்கு 14 மில்லியன் தொலைபேசிகள் பாவனையில் உள்ளன. இது பாரிய அபிவிருத்தியாகும்.

இது இவ்வாறிருக்க நாட்டின் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது. இந்தியாவுடனும் இது தொடர்பில் பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளன. அத்துடன் இத்திட்டத்தை எதிர் வரும் மூன்று வருடங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொலைத்தொடர்புத்துறையின் முதலீட்டாளர்களும் உலகக் கோடீஸ்வரர்களுமான இந்தியாவின் அம்பானி சகோதரர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அடுத்த வாரமளவில் இங்கு வரவுள்ளனர் என்றார். (6-4)

# பாடசாலைகள் தோறும் சாரணிய இயக்கம் ஆரம்பம்

(வேலணை)

யாழ் மாவட்ட கல்வி வலயங்களுக்குட்பட்ட சகல பாடசாலைகளிலும் சாரணிய இயக்கத்தை தோற்றுவித்து நடைமுறைப் படுத்து வதற்கு இலங்கை சாரணியம் சங்கத்தின் வடமாகாண ஆணையாளர் சபையினர் ஓர் செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைவாக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஒவ்வொரு ஆசிரியர்களை பாடசாலையின் அதிபர் தெரிவுசெய்து, அதற்கான அங்கீகார கடிதத்தை செ.தேவறஞ்சன், சாரணிய உதவி, மாவட்ட ஆணையாளர், மேலதிக மாகாணகல்வி பணிப்பாளர் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம் எனவும் பாடசாலை அதிபரால் தெரிவு செய்யப்பட்ட அப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கு 2 நாள் சாரணிய வதிவிட பயிற்சிப்பட்டறை வழங்கப் படவுள்ளதாக சாரணியத்தின் யாழ்.மாவட்ட சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (6-22)






செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக்கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா உரை யாற்றுவதையும் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் முருகேசு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டோர் கைது

(பருத்தித்துறை)

வன்னியில் விசுவமடு, கண்டாவளைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அப்பகுதியில் காணப்படும் கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி களவாக விற்பனை செய்தவர்களும், அங்குள்ள வீட்டுத் தளபாடங்களை திருடியவர்களுமாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதால் மக்கள் கவலையடைந்துள்ளனர். திருடர்கள் அயலவரின் வீட்டுத் தளபாடங்களைத் திருடி தங்களது வீடுகளுக்குப் பயன்படுத்தி வருவதாகவும் வீட்டைப் பார்வையிட்ட போது இருந்த பொருட்கள் மீண்டும் வீட்டிற்குச் செல்லும் போது காணாமல் போய் இருப்பதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (6-10)

## புனரமைப்பு செய்யப்பட்டு மீளஇயங்கும் கிளிநொச்சி பொது மருத்துவமனை

(வேலணை)

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையானது 2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்த காலத்தில் நிக்கோட் நிறுவனத்தின் முழுமையான நிதிபங்களிப்பின் மூலம் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு மட்டுமன்றி வன்னி பெருநிலப்பரப்பு மக்களுக்கும் போர் உக்கிரமடைந்த காலத்திலும் தனது முழுமையான சேவையை ஆற்றி வந்ததது யாவரும் அறிந்ததே.

கடந்த 2008 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் இவ் மருத்துவமனை முழுமையாக தனது சேவைகளை இடைநிறுத்தி, மக்களுடன் மக்களாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் இருந்து தனது சேவையை நடாத்தி வந்தது.

கடந்த வருடம் வன்னியில் போர் சூழல் உக்கிரமான போது இம் மருத்துவமனையானது பலத்த சேதத்துக்குள்ளானது. போர் 2009 மே மாதம் முடிவுக்கு வந்ததன் பின்பு இம் மருத்துவமனை இராணுவ முகாமாக மாற்றமடைந்தது.

கிளிநொச்சி பகுதிக்கு தற்போது மக்கள் மீளக் குடியேற தொடங்கியதன் பின்பு, மீளவும் இவ் மருத்துவமனையை இராணுவம் மருத்துவமனை நிர்வாகத்திடம் முழுமையாகக் கையளித்தது.

இதனை மீள இயக்கும் முயற்சியில் மருத்துவனை நிர்வாகமும் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவினரும் முயற்சியில் இறங்கினார்கள்.

இதன்படி, பிரித்தானியா அனைத்துலக அபிவிருத்தித்துறையின் நிதியானது, ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நிறுவனமான யுனிசெப் நிறுவனத்திடம் வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் இம் மருத்துவமனையின் மீள் புனரமைப்புக்கு வழங்கப்பட்டது.

இவ்நிதியின் மூலம் இப் பொது மருத்துவமனையில் அவசரசிகிச்சைப்பிரிவு, மகப்பேற்று பிரிவு, குழந்தைநலப் பிரிவு என்பனவும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

இத்துடன் புதிய மருத்துவசிகிச்சை உபகரணங்கள், அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று அறை என்பனவும் திருத்தம் செய்யப்பட்டு கடந்த 27.05.2010 அன்று புதுப்பொலிவுடன் மீண்டும் இயக்க ஆரம்பித்துவைக்கப்பட்டது. தற் போது இம் மருத்துவமனையில் பெருமளவு மக்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

மேலும் இம் மருத்துவமனையானது அனைத்து நவீனவசதிகளுடனும் புதிதாகக் கட்டி தரப்படுமென யப்பான் அரசாங்கம் 2004 இல் தனது சிறப்புத் தூதுவர் மூலம் அறிவித்ததுடன் அதற்கான முன்மொழிவுடன் கூடிய மாதிரி வரைபடம் விளம்பரப் பலகையாக பிரதான வாயிலில் (ஏ9 பாதைக்கு கிழக்காக) திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நடவடிக்கையை வரும் காலங்களில் யப்பான் அரசாங்கம் நிறைவேற்றி தருமா என கிளிநொச்சி மாவட்ட மக்கள் வினாவுகின்றனர். (6-22)

## 'சீபா' வில் கைச்சாத்திடுமாறு இந்தியா கடும் அழுத்தம்

### விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது ஆயுதங்களை வழங்கி உதவி செய்தமைக்காக இந்தியா இலங்கையை சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திட வலியுறுத்துவதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தியா இலங்கையில் பாரியளவில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக அமைந்திருந்தது. இந்த நிலையில் "சீபா" உடன்படிக்கையின் மூலம் இலங்கையைக் கட்டுப்படுத்தி வைக்க முயல்வதாக கருணாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டுக்களை இவர் முன்வைத்தார்.

சீபா உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டால் இந்தியாவின் கைத்தொழில்கள் மற்றும் யாகங்கள் யாவும் இந்திய மயமாகும் என அவர் எச்சரித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது இந்தியா இலங்கைக்கு படையினரை அனுப்பியதுடன் செய்மதி தொழில்நுட்பத்தையும் வழங்கியது. அத்துடன் போர் வலயங்களை அறிவித்து இந்தத் தருணத்தில் இலங்கைக்கு இந்தியக் கடற்படையினர் ஆயுதங்களை வழங்கினர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தியாவுக்காகவே போரை நடத்தியதாக குறிப்பிட்டிருக்கிறார். இது இலங்கையில் பாரியளவில் இலங்கை தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்தது. இந்த நிலையில் இதற்கு கைமாறாக இந்தியா இலங்கையை "சீபா" உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு கோருவதாக விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். (6-4)

## மன்னார் பெரியமடு கிராமத்தில் 100 குடும்பங்கள் மீள்குடியேற்றம்


மன்னார் மடுப் பிரதேச செயலகர் பிரிவிலுள்ள பெரிய மடு கிராமத்தில் கடந்த 4 ஆம் திகதி சுமார் 100 வரையான குடும்பங்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர்.

1990 ஆண்டு போர்ச் சூழ்நிலையால் வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேறிய இம்முஸ்லிம் மக்கள் புத்தளம் , மன்னார் பகுதிகளில் அகதிகளாக வசித்து வந்தனர்.

2003 ஆம் ஆண்டு சமாதான காலப் பகுதியில் சில முஸ்லிம் மக்கள் பெரியமடு பகுதிக்கு வந்து தமது காணிகளைப் பார்வையிட்டதுடன், சிலர் தமிழ் மக்களுக்கு தங்கள் காணிகளை விற்பனை செய்தும் சென்றுள்ளனர்.

தற்போது முதல் கட்டமாக 100 குடும்பங்களை அரசாங்கம் மீளக்குடியேற்றியுள்ளது.

இந்நிகழ்வில் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனஸ் ஹினைஸ் பாரூக் கலந்து கொண்டார் . (6-22)







சாவகச்சேரி கிராம்புவில் ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் வருடாந்த இல்ல விளையாட்டு விழாவில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராஜா மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும் மாணவர்களது இடைவேளை நிகழ்வையும் மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி இராசம்மா பரிசில் வழங்கிக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி நிருபர்)

# அபிவிருத்தியில் ஏனைய நாடுகளை முன்மாதிரியாக கொண்டு இலங்கை செயற்படவேண்டும்

## மலேசிய முன்னாள் பிரதமர் அறிவுரை



(கொழும்பு)

இலங்கை போன்றதொரு நாட்டை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் வெளிநாடுகளிலிருந்து கடன்களை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம்.எனினும் அதிகளவில் வெளிநாட்டுக் கடன்களிலேயே தொடர்ந்தும் தங்கியிருப்பது நல்லதல்ல என்று மலேசியாவின் முன்னாள் பிரதமர் டாக்டர் முஹதீர் மொஹமட் தெரிவித்தார்.

மலேசியாவையே அல்லது வேறொரு நாட்டினையோ முன்மாதிரியாகக் கொண்டு போருக்குப் பின்னரான இலங்கையை அபிவிருத்தி செய்யமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற இலங்கை - மலேசிய வர்த்தக சங்கத்தின் சர்வதேச வர்த்தகத் தலைவர்கள் சம்மேளனத்தில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த டாக்டர் மஹதீர் மொஹமட் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

நீண்டகாலமாக இலங்கையை ஆட்கொண்டிருந்த யுத்தம் முடிவடைந்துவிட்டது. இந் நாட்டில் சிறந்த சூழல் உருவாகியுள்ளதை என்னால் காணமுடிகின்றது.

தனியார் துறையினரும் அரச துறையினரும் நாட்டின் அபிவிருத்திக்காக கூட்டிணைந்து பாடுபடுகின்றனர்.

இன்றைய நிலையில் இலங்கையில் உள்ள தலைவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கான சிறந்த நடவடிக்கைகளை முன் எடுத்துள்ளதாக கருதுகிறேன்.

மலேசியப் பொருளாதாரம் ஒரு காலத்தில் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்ததுடன் வெளிநாடுகளின் ஆட்சியின் கீழேயே நாம் வாழ்ந்து வந்தோம். அப்போது, மிக ஏழை மக்களும் மிகப் பணக்காரர்களுமான இருவேறு துருவங்களாக சமூக அமைப்பு இருந்தது. இது எனது கவனத்தை ஈர்த்தது. இந்த சமூக கட்டமைப்பை சீராக்கி பொருளாதார ரீதியில் முன்னேற்றுவதற்காக நாம் முன்நின்று பாடுபட்டோம்.

இது அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. ஆனால், ஒரு விடயத்தை கவனிக்க வேண்டும்.அதாவது இவ்விரு மக்கள் பிரிவினரிடையேயும் வருமானத்தை சமமானதாக மாற்றவேண்டும் என்பதில்லை • மாறாக நியாயமான அடிப்படையில் வருமான ஏற்றத்தாழ்வை சீர்செய்யவேண்டும் என்பதாகும்.

மலேசியாவின் முன்னேற்றத்திற்காக எனது தலைமையிலான குழுவினர் தென் கொரியா, ஜப்பான் போன்ற பல நாடுகளின் அனுபவங்கள் மற்றும் அணுகுமுறைகளை கற்றுக்கொண்டோம். அவ்வாறே, யுத்திற்கு பின்னரான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டுள்ள இலங்கையும் சர்வதேச நாடுகளின் முன்மாதிரிகளை கற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கை போன்றதொரு நாட்டினை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும் போது, வெளிநாடுகளில் இருந்து, சர்வதேச நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெறவேண்டி ஏற்படும் தான். ஆயினும் நாடொன்று அதிகளவில் கடன்களில் தங்கியிருப்பதும் நல்லதல்ல. வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொண்டு அபிவிருத்தக்காக பயன்படுத்தும் அதேநேரம், வெளிநாட்டு முதலீடுகளையும் கணிசமானளவுக்கு வரவழைக்கவேண்டும். ஏக காலத்தில் நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்வது மட்டுமன்றி, அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி உள்நாட்டு வளங்கள் மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள் வதிலும் கூடிய கனவம் செலுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் உங்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், இலங்கை அரசாங்கத்தின் உயரதிகாரிகளும் இந் நாட்டிலுள்ள வர்தத்க தலைவர்களும் எனது ஆலோசனையை கேட்டனர் தான். ஆனால், நரன் அவர்களின் உத்தியோகபூர்வமான பொருளியல் ஆலோசகர் இல்லையே! அந்த வகையில், உரைகளை ஆற்றுவதே சௌகரியமானதென கருதுகிறேன். அத்துடன் உலக அனுபவங்களை அவர்கள் தான் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார். (6-4)

## இலவச உலருணவு நிவாரண விநியோகம்

(யாழ்ப்பாணம்)

11.8.2006 இற்கு முன் உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் மேற்படி விநியோகத்திற்கு சிவப்பு நாட்டரிசி,கோதுமை மா, சீனி,பருப்பு ஆகியி பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்ப்டுள்ளதாகவும் இவ் விநியோகப் பொருட்களுக்கான வழங்கற் கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் பெற்றுக் கொண்டு பொருட்களை நாவற்குழி உணவுக் களஞ்சியத்திலிருந்து பெற்று விநியோக நடவடிக்கைகளை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (6)

# போஷாக்கின்மையை நிவர்த்திக்க —அரசாங்கம் தவறியுள்ளது—

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையை அச்சுறுத்தியுள்ள போஷாக்கின்மை குறைபாட்டை நிவர்த்திக்க 500 மில்லியன் ரூபாவை செலவிடத் தயாரில்லாத அரசு இந்திய நடிகர்களை அழைத்து நடத்திய களியாட்டத்துக்கு 800 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாக ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுகாதார அமைச்சு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைப் பொறுத்தவரையில் திரிபோஷத் திட்டம் செயலிழந்து போயுள்ளது. அத்திட்டத்தை முன்னெடுக்க தற்போதைய அரசிடம் எந்தத் திறமையும் இல்லை.

இலங்கையில் 100க்கு 20 வீதமானோர் செல்வந்தர்களாகவுள்ளனர். அதேபோல் 100க்கு 20 வீதமானோர் மிகவும் வறுமைக்குட் பட்டவர்களாகவுள்ளனர். எனவே இவ் வாறு வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களை இலக்கு வைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.


இலங்கையில் ஏற்பட்டுள்ள போஷாக்கின்மை பிரச்சினையால் கல்வி மட்டத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த போஷாக்கின்மை பிரச்சினையை தனியாக சுகாதார அமைச்சினால் மட்டும் தீர்த்து வைக்க முடியாது.

தேசிய போஷாக்கு உபாயத்தை கடைப் பிடிக்கவேண்டும். அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும்.இதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள போஷாக்கின்மை பிரச்சினையைத் தீர்க்க 500 மில்லியன் ரூபா போதுமானது. ஆனால் இதனை செலவிடத் தயாரில்லாத அரசு இந்திய நடிகர்களை அழைத்து 800 மில்லியன் ரூபாவை செலவிட்டு களியாட்ட விழாவை நடத்தியுள்ளது என்றார். (6-4)

# வெளிநாட்டுப் பயிற்சிக்குச் செல்லும் வைத்தியர்களுக்கு புதிய கட்டுப்பாடு

## அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

வைத்தியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகள் தேவையில்லை. அவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்வதாயின் 5 மில்லியன் ரூபா பிணையில் கைச்சாத்திட வேண்டும் என்று அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சுகாதாரம் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அரசாங்க செலவில் வெளிநாடுகளில் பயிற்சிகளைப் பெற்ற வைத்தியர்கள் இலங்கையில் அரசாங்க வைத்தியசாலைகளில் உபகரணங்கள் இல்லை எனக் கூறி கூடுதலான சம்பளம் மற்றும் வரப் பிரசாதங்களுக்காக தனியார் வைத்தியசாலைகளுக்கு சென்று விடுகின்றனர்.

வைத்தியர்கள் பணம் சம்பாதிக்கும் முயற்சிகளிலேயே ஈடுபடுகின்றனர். அதற்காகத் தான் கற்றுள்ள துறைக்கு ஒத்த தனியார் வைத்தியசாலைகள் இருக்கின்ற இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கே மாற்றம் பெற்று செல்ல விரும்புகின்றனர். இன்றேல் கொழும்புக்கு வருவதற்கு முயற்சிக்கின்றனர்.அதற்கு கடந்த காலங்களில் நான் இடமளிக்கவில்லை.

சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சீர்கேடுகள் இடம்பெற்றதாக கடந்த தேர்தல் காலங்களின் போது பிரசாரங்களில் ஈடுபட்டோர் இன்று சபையில் இல்லை. அவர்களை மக்கள் நிராகரித்துவிட்டனர். சுகாதாரத் துறையில் நான் சேவை செய்யவில்லை எனில் எனக்கு இலட்சக்கணக்கான வாக்குகள் எவ்வாறு கிடைத்தது.

அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்த இன்னும் பல நாடுகளிலும் சுகாதாரத் துறையில் பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால் அங்கு அரசியல் இலாபம் தேடுவதற்காக எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை.

ஒவ்வொரு மருந்துக் குப்பிகள் மற்றும் மருந்துகளை பரிசோதிப்ப தற்கான இயந்திரம் உலகத்தில் எங்குமே இல்லை. தேவர் வந்தாலும் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

அரச செலவில் அவுஸ்திரேலியாவில் பயிற்சி பெற்ற வைத்தியர் வேலையை விட்டு விலகி தனியார் வைத்தியசாலைக்கு சென்றிருப்பதற்கு நான் பலியா?

ருபெல்லா பிரச்சினை என்றனர். ஆனால், அந்த மாணவி ருபெல்லா ஒவ்வாமையினால் மரணமடைந்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதுடன் வைத்தியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சிகள் தேவையில்லை என்பதே எனது கருத்தாகும் என்றார். (6-4)

## நல்லூர் பிரதேச சபையினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினால் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் கீழ் விசேட கழிவு அகற்றும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் நாளை ஞாயிற்றுக் கிழமை ஜே/115, ஜே/116 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சிவகாமி அம்மன் வீதி, பாரதி வீதி, மஞ்சத்தடி வீதி, தோட்டவெளி வீதி, விவேகானந்தா வீதி, உப்புமடப்பிள்ளையார் வீதி, கே.கே.எஸ்.வீதி, சீக்கோ லேன், சத்தார் வீதி, சைவப்பாடசாலை வீதி, கலட்டி வீதி, முத்தட்டு வீதி, நந்தாவில் லேன், ஆசாரி வீதி ஆகிய இடங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (6)

# அலைகடல் மீது அமர்ந்து அருள் சுரக்கும் அன்னை நயினை ஸ்ரீ நாகபூஷணி



உலகமெல்லாம் நிறைந்து நின்று இயக்கும் சக்தியானவள் காசியில் விசா லாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாக வும் மது ரையில் மீனாட்சியாகவும், நயி னையில் நாகாச்சியாகவும் வீற்றி ருந்து அரு ளாட்சி செய்கின்றாள். சக்திபீடங்கள் அறுபத்து நான் கினுள் ஒன்றாகப் போற்றப்படுவது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆல யமாகும்.

ஏழ்கடல் சூழ்ந்த சமுத்திரத்தின் மத்தி யிலே அருட்பொலிவும், ஆன்மீகச் சிறப்பும் பெற்று, சரித்திர வரலாற்றுகளுடன் திகழ்வது நயி னாதீவு. "மணிபல்லவம்" என்று போற் றப்படும் வரலாற்றுச் சிறப்பும், இலக்கியச் சிறப்பும் இதற்கு உண்டு. அமைதியும் சாந்தமும், சமாதான மும் நிறைந்த புண்ணிய பூமி யாகிய இவ்வழகிய தீவிலே அம்பிகை எழுந்தருளி அகில உலகமெல்லா முள்ள ஆன்மாக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றாள்.

தன்னை, நாடிவரும் அடியார் கள் வேண்டும் வரங்களை மன முவந்து அள்ளிச் சொரிந்து அரு ளாட்சி செய்து கொண்டிருப் பவள் அன்னை நாகபூஷணி. அடியார்க ளின் கண்ணீரைக் காணிக்கை யாக ஏற்று அருள் பாலிக்கின்றாள் அன்னை. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவள் அன்னை.

தூய்மையான நாகவழிபாட் டினை இவ் வாலயத்தில் காண லாம். புராதன காலம் தொட்டே நாக வழிபாடு இவ்வாலயத்தில் நடை பெற்று வருகின்றது. இவ்வாலயத் தைப் போன்ற தொன்மையான நாகவழிபாட்டினை வேறெங்கும் காணமுடியாது.

முன்னதாக நாகவழிபாட்டிலே தொடங்கி, காலப் போக்கில் நாக பூஷணி வழிபாடாக வளர்ந்து, நினை வுச்சின்னமாக நயினை நாக பூஷணி விளங்குகின்றாள். முன் னொரு காலத்தில் ஒரு சர்ப்பம் இங்கே வசித்து வந் ததால், தனது சாபம் நீங்கப் பெற்றதாகவும், அதனைத் தனது திருமேனியில் அணிந்து சாப நிவர்த்தி செய் தருளியமையால்தான், இங்கு எழுந்தருளியிருக்கும் அம்பிகை 'நாகபூஷணி' என்றும் திருநாமத் துடன் விள ங் குகின்றாள் என்பது வரலாறாகும்.

## நயினை நாகபூஷணி அம்பாள் கொடியேற்றம் இன்றாகும்

அடியார்கள் அம்பிகை மீது பற்று வைத்து "நாகசாந்தி" செய் வதற்கு நயினாதீவுக்கு வருகின் றார்கள். நாகசாந்தி செய் வதன் மூலம் நாகதோஷம் நீங்குகின்றது என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் காணப்படுகின்றது. நாக தோஷத்தை நிவாத்தி செய்து, அம்பிகையின் அருளால் பிள்ளைப் பாக்கியம் பெற்றவர்கள் பலர். தொன்று தொட்டு அடியார்கள் முழு நம்பிக்கையோடு அம்பிகையைத் தரிசித்து நற்பேறடைந்துள்ளார் கள். அடியார்கள் அனுதினமும் அலை கடலில் நீந்தி அருட்கடலை நாடிவந்து நெக்குருகி நின்று நினைந்து அம்பிகையை வழிபடும் பக்தியே பக்தி.

*அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத*
*வல்லி அருமறைகள்*
*பழகிச் சிவந்த பதாம் புயத்தாள்*
*பனிமாமதியின்*
*குழவித் திருமுடிக் கோமள யாமரைக்*
*கொம்பிருக்க*
*இழிவுற்று நின்ற நெஞ்சேயிரங்கேல்*
*உனக்கு என் குறையே!*

அம்பிகையின் அழகைப் பற்றி அபிராமிப்பட்டர் இவ்வாறு பாடுகின்றார்.


நிகரற்ற அழகுடையவள் என் றும் தாமரை போன்ற சிவந்த பாதங்களை உடையவள் என்றும் குறிப்பிடுகிறார். அபிரமிப்ப்ர் போன்ற பல அரு ளாளர்கள் அம்பிகையின் திருவுருவத்தின் மீது, மனதைப் பறிகொடுத்து, தம்மை மறந்த நிலையில் பல பாடல்களைப் பாடியுள்ளார் கள். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல் லியாக விளங்குகின்ற நாக பூஷணி அம்பாள் ஐந்து தலை நாகத்தில் ப்வனி வருகின்ற காட்சி தேவலோ கக் காட்சி, மஞ்சத்தில் எழுந்தருளி பவனி வருகின்ற காட்சி அடியார் களை மெய்சிலிர்க்க வைக்கின் றது.

**நயினை நாக.குமாரசூரியர் ஜே.பி.**

கைலாச வாகனத்தில் பவனி வருகின்ற காட்சியைக் காண கண் கள் கோடிவேண்டும். கண்ணீரைச் சொரிய வைக்கின்ற இவ்வற் புதமான காட்சிகள் அடியார்க ளுக்கு உணர்வு பூர்வமானவை யாகும்.

# தற்பாதுகாப்பு போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான கௌரவிப்பு







இலங்கை இராணுவத்தின் எட்டாவது ஆண்டை முன்னிட்டு உள்ளக "ரைக்கோண்டா" தற்பாது காப்புப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் பாடசாலை மாணவர்களுக்கு படையினரால் வழங்கப்பட்ட ரைக்கோண்டா தற் காப்புப் பயிற்சியில் சித்தி அடைந் தவர்களுக்கான பட்டிகள் வழங்கு தல் மற்றும் சான்றிதழ்கள் வழங் கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத் தில் யாழ். மாவட்டப் படைகளின் தலைமைப் பீடப் பொறுப்பதிகாரி யும் இலங்கை இராணுவப் படைப் பிரிவின் ரைக்கோண்டா தற்பாது காப்பு அமைப்பின் தலைவருமான பிரிகேடியர் தலைமையில் இடம் பெற்றது.

யாழ். மாவட்டப் பாடசாலைக ளில் இருந்து பயிற்சி பெற்ற மாண வர்கள் 12 பேருக்கு பட்டிகளையும் மற்றும் சான்றிதழ்களையம் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வழங்கி கௌரவித் தார்.

ஏற்கனவே இடம் பெற்ற இரா ணுவத்தினருக்கான ரைக்கோண் டா பரீட்சையில் சித்தி அடைந்தவர் களுக்கான பதக்கங்களை யாழ். மாவட்ட படைகளின் தலைமைப் பீட அலுவலர் பிரகேடியர் ரி.என்.பி. பண்டார இலங்கை ரைக்கொண்டா பயிற்றுவிப்பாளர் சூயிக் உட்பட ஏனைய படை அதிகாரிகளும் வழங்கி கௌரவித்தார்கள்.

ரைக்கொண்டா போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனை களுக்கான வெற்றிக் கிண்ணங் களை யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரி அதிபர் கணேசராசா யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்கினராசா, யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்க ஆகியோர் வழங்கி கௌர வித்தார்கள். (6)

# பாதபூசையும் கலசபூசையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஅம்மா பகவான் ஆன்மீக சத்சங்கத்தினால் ஸ்ரீ அம்மா பகவா னின் லோக கல்யாண தினத்தை முன்னிட்டு விசேட பாத பூசையும் கலச பூசையும் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்.இந்து ஆரம் பப் பாடசாலையில் நடைபெற வுள்ளது.

இதில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் (6-4)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று கொடியேற்றம்

## கொடியேற்றம் காண்போம் வாரீர்

பல்லவி

கொடியேறுது நயினையி லின்றுதோழி
கடிதென வாடி காண்போம்

அனுபல்லவி

அடியவர் அல்லல்தீர்ப் பாளலை
அடிக்குங்கரை உறையும் அன்னை

சரணம்

வெண்ணீறணிந் துவிரத மிருந்து
பண்ணொடு பாடிப் பணிவோம்
கண்ணீர்சிந் தகவலைகள் தீரும்
பன்னீரா டும்பார்வதி யைப்பணிவோம்

பா.பாலச்சந்திரன், மயிலணி

## கொடி ஏறுது !

கொடி ஏறுது! கொடி ஏறுது!
கொள்ளையழகு பாரீர் !
கொடி போன்ற நாகபூசணியன்னை
கொடை பெறவே வாரீர்!

அன்புக் கொடி அறிவுக் கொடி
அருட் கொடியும் அவளே
பண்புக் கொடி சிவவொளியைப்
பற்றிநிற்கக் காணீர்

மனிதவுடற் கூறவற்றை
மரக்கொடியிற் காட்டி
இனிமைதரப் பறக்கவிட்ட
இயல்புண்மை உணர்வீர்

கவிஞர் செ.பரமநாதன், தாவடி.

## நின் திருவடிக்கோர் விண்ணப்பம்

கத்து கடல் முத்தொதுக்கிக் கரை சேர்க்க
கொத்துகளில் அவை அள்ளி குமரர்களும் குமரிகளும்
குதூகலிக்கும்
மொய்த்து வளர் புகழ் நயினை நகர் மேவி
நித்தம் வரும் அடியவர்கள் துயரெல்லாம் நீக்கியருள்
நாகம்மா! தாயே! நின் திருவடிக்கோர் விண்ணப்பம்
உத்தமராய் மறைபாடி அந்தணர்கள் கொடியேற்ற இன்று
உவந்து நீ எம்மினத்தார் துயர்தீர உதவவேண்டும்
சக்தி உமை நாகபூசணியே சரணடைந்தோம் காத்தருளே!

திருமதி .தவமணி சபாநாதன், நயினை.

## நீடு நலம் தரும் தேவி

பல்லவி

அலையெழுந் தாடுதம்மா ஆர்ப்பரித்தே –அன்னை
அபிராமி திருக்கோவில் கொடியேறவே
அலையெழுந்.....

அனுபல்லவி

நிலையருள் நீடுநலந் தருந்தேவி – நாகம்
மலர் தூவிப் பூசித்த பூசணியே
அலையெழுந்.....

சரணம்

அலையோசை கேட்டு துயிலெழும் தாயே –பக்தர்
அலைமேவ பதிவீதி வலம் வருவாயே
மலைமாதே மகிழ்வாகி முகம் மலர்வாயே – மகிமை
நிலையாளும் அற்புதக் காட்சியருள்வாயே
அலையெழுந்.....

அல்வாயூர் சி.சிவநேசன்

ஸ்ரீ ரங்கன் என்ரர்பிரைஸ்
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021222 2027
(C-408)

# காங்கிரஸ் மன்னிப்பு கேட்கவேண்டும்;

## பாரதிய ஜனதா கட்சி தெரிவிப்பு

(புதுடெல்லி)

போபால் விஷவாயு வழக்கு முக்கிய குற்றவாளி டேவிட் ஆண்டர்சனை அமெரிக்காவுக்கு தப்பிச் செல்ல விட்டதற்காக காங்கிரஸ் கட்சி மன்னிப்புக் கேட்க வேண்டும் என பி.ஜே.பி. தெரிவித்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் கடந்த 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆந் திகதி நள்ளிரவில் விஷவாயு கசிந்து 20 ஆயிரம் பேர் பலியாக காரணமான முக்கிய குற்றவாளி டேவிட் ஆண்டர்சன் அப்போதே அமெரிக்கா தப்பிச் சென்று விட்டார். இந்தியாவில் இருந்து ஆண்டர்சன் தப்பிச செல்வதற்கு பல்வேறு வழிகளில் உதவி செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இது குறித்து பி.ஜே.பி. செய்தி தொடர்பாளர் பிரகாஷ் ஜாவேதகர் கூறுகையில்,

நாட்டில் இருந்து ஆண்டர்சன் தப்பிச் சென்றதில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் முன்னாள் முதல் மந்திரி அர்ஜன் சிங் ஆகியோருக்கு உள்ள தொடர்பை விளக்க வேண்டும். விஷவாயு கசிந்து 20 ஆயிரம் பேர் பலியான வழக்கில் 26 ஆண்டுகள் கழித்தும் கூட முறையற்ற ஒரு தீர்ப்பு வெளியாவதற்கு உடந்தையாக இருந்துள்ளனர். ஆண்டர்சனை தப்பிச் செல்ல விட்டதன் மூலமாக நாட்டு மக்களுக்கு இருவரும் துரோகம் செய்துள்ளனர்.

அப்போதைய தலைமைச் செயலாளரின் உத்தரவு காரணமாக ஆண்டர்சனை மாவட்ட நிர்வாகம் விடுவித்து இருக்கிறது. மேலும் முதல் – மந்திரியின் அலுவலக விமானம் மூலமாகவே புறப்பட்டுச் சென்றுள்ளனர். ஆண்டர்சனுக்காக மட்டும் அந்த விமானம் புறப்பட்டு இருக்காது. முதல் – மந்திரி மாநில மந்திரிகள் அல்லது துறை செயலாளர்கள் யாராவது இருந்தால் மட்டுமே அந்த விமானத்தில் செல்ல முடியும். எனவே ஆண்டர்சனுடன் அந்த விமானத்தல் சென்றவர்கள் யார்?

தற்போது தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு மற்றொரு மந்திரிகள் குழுவை நியமித்ததன் மூலமாக மீண்டும் ஒரு நாடகத்தை காங்கிரஸ் நடத்த தொடங்கியுள்ளது. ஆண்டர்சனை அழைத்து வருவதற்காக பி.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை தற்போதைய காங்கிரஸ் அரசு தொடரவில்லை.

போபால் விஷவாயு வழக்கில் நாட்டு மக்களுக்கு எதிராகவும் அமெரிக்கர்களுக்கு சாதகமாகவும் செயல்பட்டு வரும் காங்கிரஸ் கட்சி நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இவ்வாறு பிரகாஷ் ஜாவேதகர் தெரிவித்தார். (6-4)

# லஷ்கர் – இ– தொய்பா அமைப்புக்கு தீவிரவாதிகளுடன் தொடர்புள்ளது

## சத்திஸ்கர் முதல்வர் பரபரப்பு தகவல்

(புதுடில்லி)

இந்தியாவில் இயங்கி வரும் தீவிரவாதிகளுக்கு லஷ்கர் இ தொய்பா அமைப்பு ஆயுதங்கள் வழங்கி வருவதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

சத்திஸ்கர் முதல்வர் ராமன் சிங் சமீபத்தில் ஒரு அதிர்ச்சி தகவலை தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் சத்திஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் செயல்பட்டு வரும் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தானை மையமாக கொண்டு இயங்கி வரும் லஷ்கர் பயங்கரவாத அமைப்புக்கும் தொடர்பு உள்ளது என அவர் கூறியிருந்தார். இருந்தாலும் இந்த தகவலை அவர் உறுதிப்படுத்தவில்லை.

இது தொடர்பாக மேலும் விவரமான தகவல் எதையும் அவர் தெரிவிக்கவில்லை. ஆனால் கடந்தாண்டு கைதுசெய்யப்பட்ட உமர் மதானி என்ற லஷ்கர் அமைப்பைச் சேர்ந்த நபரிடம் நடத்திய விசாரணையில் தீவிரவாதிகளுக்கும் லஷ்கர் அமைப்புக்கும் தொடர்பு இருப்பதற்கான வாய்ப்பு உள்ளதை புலனாய்வு அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். (6-4)


# திருப்பதி ஏழுமலையான் கோயிலில் அலைமோதும் பக்தர்கள் கூட்டம்

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த சில நாட்களாக ஏராளமான பக்தர்கள் குவிந்து வருகிறார்கள். நேற்று முன்தினம் வழமையை விட கூட்டம் அதிகமாக இருந்தது.

தரிசனத்திற்காக பக்தர்கள் 2 கி.மீ தூரம் வரிசையில் காத்திருந்தனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 80 ஆயிரம் பேர் தரிசனம் செய்தனர்.

உண்டியல் மூலம் ரூ 2.11 கோடி வசூல் செய்யப்பட்டது. பக்தர்கள் அதிக அளவில் குவிந்ததால் விடுதிகள் நிரம்பி வழிந்தன.

இதனால் ஏராளமான பேர் திறந்த வெளி மைதானங்களில் தங்கியிருந்தனர். நேர்த்தி செய்யும் இடத்திலும் கூட்டம் அதிகமாக



இருந்தது. அங்கு 4 மணி நேரம் காத்திருந்து நேர்த்தி செய்ய வேண்டியிருந்தது. (6-4)

# மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்கு இந்தியா இராணுவத்தை பயன்படுத்துமா?

(புதுடில்லி)



மாவோயிஸ்டுகளை அடக்க இராணுவத்தை பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கைகள் விடப்பட்டது.

ஆனால் மத்திய அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. இதற்கிடையே மாவோயிஸ்டுகள் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்தபடி உள்ளதால் இராணுவத்தைப் பயன்படுத்தலாமா? என்று மத்திய அரசு பரிசீலிக்க தொடங்கியுள்ளது. இது குறித்து மத்திய மந்திரி சபை கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் மத்திய மந்திரிசபை கூட்டம் நடந்தது. இராணுவ விமானம் மூலம் மாவோயிஸ்டுகள் மீது குண்டுவீச்சு நடத்தலாமா? என்று விவாதிக்கப்பட்டது.

மாவோயிஸ்டுகள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் இராணுவ வீரர்களை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று உள்துறை சார்பில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் பாதுகாப்பு அமைச்சகம் அதை மறுத்துவிட்டது.

இராணுவம் நாட்டு எல்லையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் உள்ளது. தேவையில்லாமல் இராணுவத்தை காடுகளுக்குள் வைத்திருக்கமுடியாது என்று பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் கூறினார்கள்.

இராணுவம் சார்பில் கண்காணிக்க ஆள் இல்லாத விமானம் மட்டுமே தந்துதவ முடியும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மாவோயிஸ்டுகளை ஒடுக்குவது தொடர்பான பிரச்சினையில் மத்திய உள்துறை மந்திரிக்கும் பாதுகாப்பு மந்திரிக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

இதையடுத்து மீண்டும் ஒரு தடவை சந்தித்துப் பேச உள்துறை மற்றும் இராணுவ அமைச்சக அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். மாவோயிஸ்டுகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை யார் தலைமையில் நடத்துவது என்பதிலும் இரு அமைச்சக அதிகாரிகளிடம் முடிவு காணப்படவில்லை. (6-4)

## பாரதச் செய்திகள்

# இலங்கைக்கு கடத்த முயன்ற கடலட்டைகள் பறிமுதல்

(சென்னை)

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக கடத்த முயன்ற 388 கிலோ கடல் அட்டையை மத்திய புலனாய்வுப் பிரிவு சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுகுறித்து மத்திய புலனாய்வுப் பிரிவின் தலைமை இயக்குநர் ராஜன் வெளியிட்ட அறிக்கையில், தூத்துக்குடி கடல் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கடல் அட்டைகளை பிடித்து அவற்றை வெளிநாட்டிற்கு கடத்த ஒரு கும்பல் முயற்சிப்பதாக சுங்க அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகனேரி கடற்கரைப் பகுதியில் கடந்த புதன் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்போது இரவு 7 மணியளவில் ஒரு ஜீப் வண்டி கடற்கரை நோக்கி வந்தது.

அதை அதிகாரிகள் தடுத்து சோதனை செய்த போது அதில் 12 பிளாஸ்டிக் கான்களில் வேக வைத்த 388 கிலோ கடல் அட்டைகள் இருந்தன. விசாரணையில் இலங்கைக்கு கடத்துவதற்காக அவை வல்லம் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்டது என்று தெரியவந்தது. இதையடுத்து அவை பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக தூத்துக்குடியைச் சேர்ந்த மாரியப்பன், மூசா, கேடன்குமார், முகமது அசாருதீன், மன்சூர் அலி ஆகிய ஐந்து பேர் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டனர். அவர்கள் ஐந்து பேரும் மாவட்ட வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சீனா, ஜப்பான், மலேசியா போன்ற நாடுகளில் கடல் அட்டைகள் மருத்துவ குணம் உடையதாக அங்கு வாழ் மக்கள் நம்புகின்றனர்.

இதைத் தெரிந்து வைத்துள்ள கடத்தல் கும்பல் கடல் அட்டைகளை சட்ட விரோதமாக கடத்த முயற்சிக்கின்றன என்று தெரிய வருகிறது. (6-4)



உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் தென்னாபிரிக்காவில் தொடங்கவிருப்பதையொட்டி, ஒரிசா தலைநகர் புவனேஷ்வரம் கடற்கரையில் பிரபல மணல்சிற்ப கலைஞர் சுபால் மகாராணா, உலகக் கோப்பை மணல் சிற்பத்தினை வடிவமைத்து அதற்கு இறுதி வடிவம் கொடுக்கிறார்.

ஒரு விடயம் பற்றி அநுதாபம் இருந்தால்தான் அதைப் புரிந்துகொள்ள முடியும். - ராஜாஜி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## வன்னியில் இடம்பெறும் பயங்கரம் குரல் கொடுக்கத் தயாராகவேண்டும்

வன்னிப் பெரு நிலப்பரப்பில் நடந்து முடிந்த பெரும் போருக்குப் பின்னர் இப்போது மீள்குடியமர்வு இடம்பெறுகின்றது.

எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில், தங்கள் சொந்த மண்ணில் குடியேறுவதை தவிர தங்கள் வாழ்க்கைக்கு வேறு ஆதாரம் இல்லை என்ற கட்டாயத்தில் மீள்குடியமர்வில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

இருந்தும் வன்னியில் மீள் குடியமரும் மக்களுக்கான பாதுகாப்பு வலுப்படுத்தப்படவில்லை.

பாலியல் வல்லுறவுகள் இடம்பெறுவதான நிலைமை அங்குள்ளதெனில், மக்களின் அவல நிலை எத்தகையதென்பதை ஊகித்தறிவதில் எந்தக் கஷ்டமும் இருக்க முடியாது. எனவே வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அரசின் கட்டாய கடமையாகும்.

யுத்தத்தில் பெற்ற வெற்றி என்பது ஓர் இனத்தை நசுக்குவதற்கானதாக இருக்குமாயின், அந்த வெற்றியின் அனுபவிப்பால் ஈற்றில் கிடைப்பது துன்பமேயன்றி வேறு எதுவும் இல்லை என்பது உணர்தற்குரியது.

முப்பது வருட கால யுத்தத்தில் அடையப்படும் வெற்றி எதுவாக இருக்குமெனில், எல்லா இன மக்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

இருந்தும் துரதிர்ஷ்ட வசமாக தமிழ் மக்களை அரசு மாற்றுக் கண் கொண்டே பார்க்கின்றது. தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள், இந்த நாட்டில் மிகப்பெரியதொரு போட்டி இருக்குமாயின் அது, சிங்களவர்-தமிழர் என்ற இனத்துவப் போட்டி என அரசு கருதுகின்றது. இதன் காரணமாகவே தமிழர் பகுதிகளில் உள்ள அரச மரங்களிலெல்லாம் புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்கின்றது.

சாதாரணமான நிலையில் நின்று இது பற்றிச் சிந்தித்தால் அரசின் செயல் எந்தளவு தூரம் சிறுமைத்தனமுடையது என்பதை உணர முடியும்.

ஜனநாயக அரசு, ஜனநாயக நாடு என்பதெல்லாம் வெறும் பேச்சளவிலாக அமையுமாயின் எதிர்காலத்தில் ஜனநாயகப் பண்புகளுக்கு ஆபத்து ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆக, வன்னிப் பெரு நிலப்பரப்பில் மீளக் குடியமரும் மக்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு உறவுகளை பறிகொடுத்து விட்டு குடிசைக்குள் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கும் அபலைப் பெண்கள் மீது விடும் சேஷ்டை இந்த நாட்டை கண்ணீரில் மிதக்க வைக்கும்.

இதற்குப் பாத்திரமானவர்கள் நிச்சயம் வருந்த நேரிடும் என்பதால் அனைவரும் விழிப்பாக இருந்து வன்னி மக்களின் நலனில் கரிசனை கொள்ள வேண்டும்.

# நாட்டில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

## வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறல்

(கொழும்பு)

நாட்டின் அநேகமான பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை நிபுணர் தெரிவிக்கையில் ,வங்காளவிரிகுடாவில் வளிமண்டலத்தில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக தென்மேல் பருவபெயர்ச்சி காற்றானது தீவிரமடைந்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதுடன் மத்திய மலைநாட்டில் மலைத் தொடர்களின் மேற்குப் பகுதிகளில் 80 கி.மீ மணித்தியாலம் வரை காற்றின் வேகம் காணப்படும்.

மேல்மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தில் அவ்வப்போது மழைபெய்யும் என்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு,கிழக்கு,வடமத்திய,ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் சுற்றியுள்ள கடல்பகுதியும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் மீனவர்கள் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்படும் முன்னறிவித்தலைக் கட்டாயமாக செவிமடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதேவேளை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்றுக் காலை 8.30 மணிவரை 29.6மி.மி மழை பதிவாகியுள்ளது என திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

(6)

## மீள்குடியமர்வு தொடர்பான அறிவித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் வசித்து வரும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகல கிராமஅலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேசங்களில் நீக்கம் செய்து மீளக்குடியமர்வுக்காக எதிர்வரும் 21, 22 ஆகிய இரண்டு நாட்களும் கிளி/ தர்மபுரம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வருகை தந்து தங்களது மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் இதேபோன்று கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி, சிவிக்செண்ரர், மாயவனூர், மாவடியம்மன்,இராமநாதபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த அனைவரும் தங்கள் தற்காலிக பதிவுகளை உரிய பிரதேச செயலகங்களில் நீக்கம் செய்து மீளக்குடியமர்வுக்காக 22 ஆம் திகதியன்று கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை வருகை தந்து தங்களது மீளக்குடியமர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (6)

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைக்காதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் யூன் மாதம் 15 ஆந் திகதி டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதேபோன்று மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிலையங்களிலும் டெங்கு ஒழிப்புச் சுத்திகரிப்பு பணி இடம்பெறவேண்டுமென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் கல்வி நிலையங்களில் சிரமதானப் பணிக்காக மாணவர்களை ஈடுபடுத்தக்கூடாது எனவும் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் தமது செலவில் சுத்திகரிப்புப் பணிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். அதனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்பார்வை செய்யவுள்ளார்கள் என்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்காத தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (6)

## கடும்மழை,இடி முழக்கத்தால் ஆலய மேற்பகுதி சேதமடைந்துள்ளது

(குருநகர்)

யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தில் அமைக்கப்பெற்றுள்ள மீன் சின்னம் மற்றும் டோமில் மேற்பகுதியில் அமைக்கப்பெற்ற குருசு என்பன இடியினால் சேதமடைந்துள்ளது.

இடியின் சத்தத்தால் சூழவுள்ள பொதுமக்கள் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாகி இருந்தனர்.

மேலும் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் கடற்கரை வீதியை அண்டிய பகுதிகளிலுள்ள குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6-39)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மாவட்டக் கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தலைமையில் யாழ்.மாவட்ட கிளை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தேசிய தலைமையகத்தின் தேசியச் செயலாளர் கலந்து கொண்டு மாவட்டக் கிளையின் கட்டட அமைப்பு ,பிரிவுக் கிளையின் கட்டட அமைப்பு ,அபிவிருத்தி விடயங்கள் பற்றி கலந்துரையாடவுள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கிளையின் ஆளுநர்சபை உறுப்பினர்கள், பிரிவுக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்டக் கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (6-134)

## செஞ்சிலுவைச் சங்கத்தினால் 100 வீடுகள் நிர்மாணம்

(கொழும்பு)


கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் முதற்கட்டமாக நூறு நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 50 குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா படி வீடுகளை அமைக்கும் பணிகளை ஆரம்பிக்கவென நேற்று முன்தினம் நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நூறு வீடுகளும் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவேகானந்தநகர் ,ஆனந்தபுரம் ,கணேசபுரம் ஆகிய நகர்களில் அமைக்கப்படவிருப்பதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (6-4)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### மனிதன்



நான் துன்பப்பட்டால் அது எனக்கு நானே உண்டாக்கிக் கொண்டது; நான் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது-நான் தூய்மையற்றவனாக இருந்தால் அதுவும் நான் செய்து கொண்டது தான்.இதுவே,நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகின்றது.மனித சங்கல்பம் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது.அந்த வலிமையான,உறுதியான எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும் இயற்கையின் ஆற்றலும் கூட கட்டாயம் தலை வணங்கியே தீரவேண்டும்,ஒடுங்கியாக வேண்டும் ,சேவகர்களாக வேண்டும்.

# அமெரிக்காவில் குடியேறுபவர்களில் இந்தியர்களுக்கு மூன்றாவது இடம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அதிகளவில் குடியேறும் வெளிநாட்டவர்கள் பட்டியலில் இந்திய வம்சாவளியினர் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளனர். அமெரிக்கக் குடியேற்றத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவில் குடியேறுவது அதிகரித்து வருகிறது. இதில் மெக்சிக்கோவை சேர்ந்தவர்கள் தான் அதிக அளவில் அமெரிக்காவில் குடியேறியுள்ளனர். இதற்கு அடுத்த இடத்தை பிலிப்பைன்சை சேர்ந்தவர்கள் பிடித்துள்ளனர். இந்தப் பட்டியலில் மூன்றாவது இடம் இந்தியர்களுக்கு கிடைத்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 10.6 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அமெரிக்காவில் வசிக்கின்றனர். கடந்த 1990 முதல் 2000 வரையிலான ஆண்டுகளில் தான் இந்தியர்கள் அதிகளவில் அமெரிக்காவில் குடியேறினர். இதற்குப் பின், இந்த எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது. கிழக்கு ஆபிரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வசித்த இந்திய வம்சாவளியினரும் தற்போது அதிகளவில் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கலிபோர்னியா, நியூஜெர்சி ஆகிய மாகாணங்களில் தான் அதிகளவில் இந்தியர்கள் வசிக்கின்றனர். அமெரிக்காவில் குடியேறிய மற்ற வெளிநாட்டவர்களை விட இந்தியர்கள் அதிகம் கல்வி அறிவு பெற்றவர்களாகவுள்ளனர். அமெரிக்காவில் உள்ள நான்கில் ஒரு இந்தியர் தகவல் தொழில்நுட்ப துறையில் பணிபுரிபவராக உள்ளார்கள். இவ்வாறு குடியேற்றத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6-4)

# அல்கொய்தா இயக்கத்திற்கு உதவியவருக்கு சிறைத்தண்டனை

(நியூயோர்க்)

பாகிஸ்தானை சேர்ந்த சையத் ஹாஷ்மி அமெரிக்காவில் புரூக்ளின் பல்கலைக் கழகத்தில் படித்தவர். அப்போது அவர் லண்டனில் உள்ள அல்கொய்தா தீவிரவாதி ஜுனைட் பாபர் என்பவருக்கு உதவிகள் செய்ததாக கைது செய்யப்பட்டார்.

அவர் ஆப்கானிஸ்தானில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு தேவையான தளபாடங்களை வாங்கி பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்தார்.

தீவிரவாதி பாபருக்கு ரூ.15 ஆயிரம் நிதியுதவி வழங்கியதுடன் இவர்களுக்குத் தேவையான பொருட்களை தன் வீட்டில் சேகரித்து வைப்பதற்கு உதவினார் என்ற குற்றங்களை எல்லாம் அவர் நீதிமன்றில் ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு 15 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஹாஷ்மி 2006 ஆம் ஆண்டு லண்டனில் இருந்து பாகிஸ்தானுக்கு செல்ல முயன்ற போது ஹீத்ரூ விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டார். அன்று முதல் அவர் சிறைவைக்கப்பட்டுள்ளார். (6-4)

# தென்கொரியாவின் ஏவுகணை சோதனை தோல்வியடைந்துள்ளது

(தென் கொரியா)

தென் கொரியா தயாரித்த ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டதும் வெடித்துச் சிதறியதால் விண்வெளித்துறையில் அந்நாடு பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

ரஷ்ய உதவியுடன் முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நரோ 1 ரொக்கெட் மூலம் பருவ நிலையை கண்காணிக்கும் செயற்கைகோளை செலுத்த தென் கொரியா திட்டமிட்டிருந்தது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஒரு நாள் தாமதமாக நேற்று முன்தினம் ஏவப்பட்ட இந்த ரொக்கெட் 137 ஆவது விநாடியிலேயே வெடித்துச் சிதறி கீழே விழுந்ததாக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஆன் பியாங்மான் தெரிவித்தார்.

கடந்த 18 ஆண்டுகளில் வெளிநாட்டு ரொக்கெட்டுகள் மூலம் 11 செயற்கைகோள்களை அந்நிய ஏவுதளங்களிலிருந்து தென் கொரியா செலுத்தியுள்ளது. அந்நாடு கடந்த ஆகஸ்டில் சொந்த ஏவுதளத்திலிருந்து அனுப்பிய ரொக்கெட் சுமந்து சென்ற செயற்கைகோள் சுற்று வட்ட பாதையில் நிலை கொள்ளவில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தோல்வி தென் கொரியாவின் விண்வெளி சாதனைக் கனவை தகர்த்துவிட்டது என தெரிவிக்கப்படுகிறது. (6-4)



வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொண்ட ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரோட்ரிஜியஸை (இடது) போப் 16 ஆம் பெனடிக் வரவேற்பதை படத்தில் காணலாம்.

# துருக்கியில் ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கி நால்வர் பலி

(இஸ்தான்புல்)

துருக்கியில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று தோகட் மாகாணத்தில் பறந்து சென்று கொண்டிருந்த போது திடீரென தரையில் விழுந்து நொறுங்கி தீப்பிடித்தது. இதில் பயணம் செய்த விமானப் படைவீரர்கள் 4 பேரும் உடல் கருகி பலியானார்கள்.

இதேவேளை பனிமூட்டம் காரணமாக ஹெலிகொப்டர் தரையில் விழுந்து நொறுங்கியிருக்கலாம் என தோகட் மாகாண ஆளுநர் செரிப் இல்மாஷ் கூறியுள்ளார்.

இதே நேரத்தில் பிரிவினை கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குர்திஷ் தீவிரவாதிகள் இந்த ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் அங்கு நடந்து வரும் வன்முறை சம்பவங்களில் இது வரை 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். (6)


# கிர்கிஸ்தான் கலவரத்தில் 12 பேர் பலியாகினர்

(பிஷேக்)

கிர்கிஸ்தானில் ஏற்பட்ட கலவரத்தில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர். கிர்கிஸ்தானில் பெரிய நகரம் ஓஷில் பயங்கர கலவரம் வெடித்தது. ஒரு சூதாட்ட விடுதியில் இரண்டு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட தகராறு, இந்தக் கலவரத்துக்கு வித்திட்டது.

இந்தக் கலவரத்தில் 12 பேர் பலியானதுடன் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கலவரத்தை ஒடுக்க இராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (6-4)



ஜோர்டன் நாட்டில் கால்களால் கணனியைப் பயன்படுத்தும் சிறுவன்...




# உலகின் மிகவும் பழைமையான சப்பாத்து கண்டுபிடிப்பு

(லண்டன்)

உலகின் மிகவும் பழைமையான சப்பாத்து அர்மீனியாவில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது.

5ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமையான இச்சப்பாத்து எகிப்தின் முதல் பிரமிட் ஆன ஜிசாவை விட ஆயிரம் ஆண்டு முன்பே தயாரிக்கப்பட்டது.

மாட்டுத் தோலில் செய்யப்பட்ட சப்பாத்தில் லேஸ் உண்டு அவை வித்தியாசமின்றி எந்தப்பாதத்திற்கும் பொருந்தும் வகையில் மூதாதையர் உருவாக்கியுள்ளனர். "உலகின் மிகப் பழைய சப்பாத்தை கண்டு பிடித்து விட்டோம்.

அது ஆணுடையதா, பெண்ணு டை யதா என்பது தான் தெரியவில்லை" என் கிறார் அயர்லாந்தின் கார்க் பல்கலைக்கழக விஞ்ஞானி ரான் பின்யாசி. (6-4)

# செனானி மண்டேலா கார் விபத்தில் மரணம்

முன்னாள் தென்னாபிரிக்கா ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் பேத்தி நேற்று இடம்பெற்ற கார் விபத்து ஒன்றில் மரணமாகியுள்ளார் என அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. 13 வயதான செனானி மண்டேலா என்பவரே இவ்வாறு மரணமானார்.

இவர் நெல்சன் மண்டேலா - வின்னி மண்டேலாவின் புதல்வியான ஸிண்ட்ஸி மண்டேலாவின் புதல்வியாவார்.


தென்னாபிரிக்காவில் ஆரம்பமாக இருக்கும் உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகளின் நேற்றுமுன்தினம் ஆரம்ப நாள் நிகழ்வில் கலந்து கொண்டு திரும்புகையிலேயே செனானி பயணித்த கார் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகிறது.

விபத்தில் இவர் மரணமான தகவலை நெல்சன் மண்டேலா ஸ்தாபனம் உறுதிப்படுத்தியுள்ளது.

செனானியின் காரை ஓட்டிச் சென்ற சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் விபத்து குறித்த மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக தென்னாபிரிக்க பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

செனானி கடந்த இரு தினங்களுக்கு முன் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# உலகக்கிண்ண கால்பந்தாட்டம்; வண்ணமயமான விழாவுடன் ஆரம்பம்






கோடிக்கணக்கான ரசிகர்களை உற்சாகத்தில் திளைக்க வைக்கும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட திருவிழா, தென்னாபிரிக்கா வில் ஜோகனஸ்பேர்க் நகரில் நேற்று கோலாகல மான விழாவுடன் ஆரம்பமானது.

இலங்கை நேரப்படி நேற்று மாலை 5.30 மணிக்கு சார்க்கர்சிட்டி மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமானது.

மாபெரும் இசை நிகழ்ச்சியோடு உலகக் கிண்ண கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

ஜோகனஸ் பேர்க்கிற்கு அண்மையாகவுள்ள புறநகரான சோவட்டோவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பிரபல பொப் பாடகிகள் ஷகிரா, அலிஷா, கீஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த இசை மழையில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட ரசிகர்கள் நனைந்தனர். இந்நிலையில் சார்ச்சர் சிட்டி மைதானத்தில் ஆரம்பமான அதிகாரபூர்வ ஆரம்பவிழாவில் உலகப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் பங்கேற்றனர்.

ஜாஸ் இசைக் கலைஞர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் மொத்தம் ஆயிரத்து 600 இசைக் கலைஞர்கள் பங்கேற்று ஆபிரிக்க கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பறை சாற்றினர்.

20 ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களும் ஆரம்ப விழாவில் பங்கேற்றினர். கொள்ளுப் பேர்த்தியின் மரணம் காரணமாக தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கலந்து கொள்ளவில்லை.

### திருவிழா கோலம்

உலகக்கிண்ண கால்ப்பந்தாட்டத்தொடர் நடைபெறும் ஜோகனஸ்பேர்க் நகரமே திருவிழாக் கோலம் பூண்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் வரிசையில் இம்முறை தென்னாபிரிக்காவில் நடக்கிறது.

ஆபிரிக்க மண்ணில் நடைபெறும் முதல் உலகக் கோப்பை எனும் பெருமிதத்தோடு தென்னாபிரிக்கா இப்போட்டியை கோலாகலமாக நடத்த தயாராகிவிட்டது.

இந்த உதைத் திருவிழா ஏற்பாடு குறித்து தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜுமா கூறுகையில்,

உலகக்கிண்ணத் தொடரை ஆரம்பமாவதற்காக வானவில் தேசம் என்று வர்ணிக்கப்படும் தென்னாபிரிக்கா முழுவதும் உற்சாகத்தோடும் பரபரப்போடும் காத்திருக்கிறது.

இது நாட்டின் வரலாற்றின் பெருமை மிகு தருணம் என்று நெகிழ்ச்சியுடன் கூறியிருந்தார்.

கடந்த 6 மாத கால கடுமையான உழைப்பின் மூலம் தென்னாபிரிக்காவில் உலகக் கிண்ணத் தொடரை நடத்த முடியுமா என்ற சந்தேகத்தை போக்கியிருக்கிறது அந்நாட்டு அரசு என்றே ரசிகர்கள் கூறுகின்றனர்.

### 32 நாடுகள்

இம் முறை உலகக்கிண்ணத் தொடரில் 32 நாடுகள் பங்கேற்கின்றன.

இதில் ஸ்லோ வேகியா அணி முதல் முறையாக உலகக் கிண்ணத்தொடரில் பங்கேற்கிறது.

அதிக முறை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய அணி என்ற பெருமையை பிரேசில் பெற்றிருக்கிறது.

நியூசிலாந்து அணி 1982ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் இந்தத் தொடரில் விளையாட தகுதி பெற்றுள்ளது. 1966ஆம் ஆண்டுக்குப் பின்னர் வட கொரியா தகுதி பெற்றுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்தாட்ட வரலாற்றில் இதுவரை ஐரோப்பா மற்றும் தென்னமெரிக்க நாடுகளைத் தவிர வேறு எந்தக் கண்டத்தையும் சேர்ந்த நாடுகள் கிண்ணத்தைக் கைப்பற்றியதில்லை.

ஐரோப்பாவில் கூட ஸ்பெயின் உள்ளிட்ட முன்னணி அணிகள் இதுவரை கிண்ணத்தை சுவீகரித்த கௌரவம் பெற்றிருக்கவில்லை.

இந் நிலையில் இம் முறையும் நீடிக்குமா அல்லது புதிய சம்பியன் அணி உருவாகுமா என்பது உலகக்கிண்ண 66 ஆட்டங்களுக்கப்பின்னர் தெரியவரும்.

உலகக்கிண்ணத்தை வெல்லும் அணிக்கு தங்கக்கிண்ணத்தோடு ரூபாய் 350 கோடி பரிசு வழங்கப்படும்.

## வெற்றியை கோட்டை விட்டது தென்னாபிரிக்கா; மெக்சிக்கோவுடனான ஆட்டம் சமனிலையானது

உலகக்கிண்ண தொடரின் நேற்று நடை பெற்ற தென்னாபிரிக்க-மெக்சிக்கோ அணிகளுக்கிடையிலான போட்டிய 1-1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.




கோல் அடிக்கும் பொன்னான வாய்ப்பை எம்பலோ வீணடித்தால் தென்னாபிரிக்கா வெற்றியை இழந்தது. 19ஆவது உலகக்கிண்ண கால் பந்தாட்டத் தொடர் நேற்று தென்னாபிரிக்க ஜோனஸ் பேர்க்கில் ஆரம்பமானது. இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் ஒ பிரிவிலுள்ள தென்னாபிரிக்க–மெக்ஸிக்கோ அணிகள் மோதின.

ஆட்டத்தின் முதல் பாதியில் அனுபவம் மிக்க மெக்ஸிக்கோ வீரர்களிடம் தென்னாபிரிக்க வீரர்களின் ஆட்டம் எடுபடவில்லை. மெக்ஸிக்கோ வீரர்கள் கோல் அடிக்கும் பல வாய்ப்புக்களை உருவாக்கினாலும் முதல் பாதியில் பலன் கிடைக்கவில்லை.

ஆட்டத்தின் 36ஆவது நிமிடத்தில் மெக்சிக்கோ ஒரு கோல் அடித்தது. வேலா அடித்த இந்தக் கோலை லைன்ஸ்மான் ஓப்சைட் என்று அறிவித்தார் தென்னாபிரிக்க கோல் காப்பாளர் குனே பந்தை கைப்பற்ற சற்று முன்னால்செல்ல கோல் லைனில் ஒரேஒரு தென்னாபிரிக்க வீரர் மட்டுமே இருந்தார்.

இதனால் இந்தக் கோல் ஓப்சைட் ஆனாது முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. பிற்பாதியில் தென்னாபிரிக்க வீரர்கள் ஆவேசமாக விளையாடினார்கள். இதற்கு 55 ஆவது நிமிடத்தில் பலன் கிடைத்தது.

தென்னாபிரிக்க வீரர் சபேலாலா தனது இடது காலால் மிக நேர்த்தியாக ஒரு கோல் அடித்து அணிக்கு முன்னிலை தேடிக்கொடுத்தார். தென்னாபிரிக்க அணிக்காக சபேலாலா விளையாடும் 50ஆவது சர்வதேச போட்டி இதுவாகும்.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 1.0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. மீண் டும் மீண்டும் தென்னாபிரிக்க வீரர்கள் மெக் ஸிக்கோ கோல்கம்பத்தை முற்றுகை இட்டனர் 65 மற்றும் 69ஆவது நிமிடங்களில் தென்னாபிரிக்க வீரர் எம்பேலாவுக்கு இரு ஓபன் ரைட் வாய்ப்புகள் கிடைத்தன. இரு வாய்ப்புகளையும் அவர் கோலாக்க மாற்றத் தவறினார்.


பின்னர் தென்னாபிரிக்காவின் தடுப்பாட்டத்தில் ஏற்பட்ட தொய்வை பயன் படுத்தி மெக்ஸிக்கோ ஒரு கோல் அடித்தது. 79ஆவது நிமிடத்தில் மாக்ஸ் அடித்த கோலால் சாச்சர்–சிட்டியில் மயான அமைதி நிலவியது திரண்டிருந்த ஆயிரக்கணக்கான தென்னாபிரிக்க ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர் ஆட்டத்தின் 89ஆவது நிமிடத்தில் தென்னாபிரிக்க வீரர் எம்பேலாவுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்தது ஆனால் துரதிர்ஷ்டம் பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. இந்நிலையில் ஆட்டம் 1–1 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. இதனால் இரு அணிகளும் தலா ஒரு புள்ளியைப் பெற்றுக்கொண்டன.




## உலகக்கிண்ணத் தொடரில் வினோதம்

# தாய் நாட்டிற்கு அண்ணன்; தந்தை நாட்டிற்காகத் தம்பி

உலகக்கோப்பைத் தொடரில் கானா அணியில் தம்பியும் ஜேர்மனி அணியில் அண்ணனும் விளையாடவுள்ள வினோதம் நடைபெறவுள்ளது.



ஜேர்மனியின் எப்.சி.ஹம்பேர்க் அணி வீரர் ஜெரோம் போடங்க், போர்ட்ஸ் மவுத் அணியின் கெவின் பிரின்ஸ் போடங்க் இருவரும் சகோதரர்கள். ஜேர்மனியில் பிறந்து வளர்ந்தாலும் போடங்க் சகோதரர்களின் தந்தை கானா நாட்டைச் சேர்ந்தவர்.

இதில் தம்பி கெவின் பிரின்சுக்கு தந்தை நாடான கானாவிற்காக விளையாட விருப்பம்.

பிபா விதிமுறைப்படி ஒரு வீரர் ஜுனியர் அணியில் எந்த நாட்டுக்காக விளையாடுகிறார்களே அதே அணிக்காகத்தான் சீனியர் அணியிலும் விளையாட வேண்டும். கடந்த 2005ஆம் ஆண்டு பிபா இந்த விதியை தளர்த்தியது. வீரர்கள் அவர் அவர் விருப்பப்படி பிறப்பின் அடிப்படையில் விரும்பும் நாட்டுக்காக விளையாடலாம் என்று புதிய விதிமுறை உருவாக்கப்பட்டது.

இந்த புதிய விதிமுறையின் படி உலகக் கோப்பைப் போட்டியில கெவின் பிரின்ஸ் போடாங்க் கானா அணிக்காக விளையாடவுள்ளார். அவரது அண்ணன் ஜெரோம் போடங்க் ஜேர்மனி அணிக்காக விளையாடுகிறார். உலகக் கோப்பை தொடரில் ஜேர்மனி, கானா அணிகள் ஒரே பிரிவில் இடம்பிடித்துள்ளன. எதிர் வரும் 23ஆம் திகதி ஜேர்மனி, கானா அணியை சந்திக்கிறது. அப்போது சகோதரர்கள் இருவரும் களத்தில் எதிர்எதிராக நிற்கவுள்ளனர். உலகக் கோப்பை வரலாற்றில் இரு சகோதரர்கள் வேறுவேறு அணிக்காக விளையாடுவதும் களத்தில் நேருக்கு நேர் மோதுவதும் இதுவே முதல் முறை. உலகக் கோப்பைப் போட்டியில் ஜேர்மனியும் கானாவும் இதுவரை ஒரே பிரிவில் இடம் பெற்றதில்லை.

இந்த உலகக் கோப்பைத் தொடரில் தான் இரு அணிகளும் ஒரே பிரிவில் உள்ளன. சகோதரர்களின் தந்தை கோடங்கிற்குத்தான் யாருக்கு சப்போட் செய்வது என்பதில் ஒரே குழப்பமாம்.

தற்போது 23 வயது நிரம்பிய கெவின் பிரின்ஸ் போடங்க் ஜேர்மனியின் 19 வயதுக்குட்பட்ட அணிக்காக 41 கோல்களை அடித்தவர். ஆனால் நீண்டகாலமாக கானா மீது அவருக்கு ஒரு பிடிப்பு உண்டு. கானாவிற்காக விளையாட விருப்பம் தெரிவித்ததும் உடனே அந்த நாடு அவரை அரவணைத்துக்கொண்டது.



# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான வழக்கு ஒத்திவைப்பு

(சென்னை)

மூன்று நாள் பயணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்தியா சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்யக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்யக் கோரி, தமிழக மக்கள் உரிமைகள் அமைப்பின் செயலரும், வழக்கறிஞருமான புகழேந்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது சென்னையில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அதில் அவர் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக் கப்பட்டுள்ளார். இந்நிலையில், அவர் சாதாரண மாக இந்தியா வந்து செல்வது சட்ட விரோதமாகும்.

இந்தியா வந்துள்ள அவரை கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக பொலிஸ் டி.ஜி.பி., உள்துறை செயலாளர் ஆகியோருக்கு கடந்த 7,8 ஆகிய திகதிகளில் மனு அனுப்பினேன்.

ஆனால் நடவடிக்கை இல்லை.டக்ளஸ் தேவானந்தா நாட்டை விட்டு வெளியேறும் முன்னர் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த மனுவில் புகழேந்தி கோரியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கின் விசாரணையை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைப்பதாக நீதிபதிகள் அறிவித்தனர். (ந-5)

## சரத் பொன்...

இரகசியமான முறையில் சரத் பொன்சேகா ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டிய, மேர்வின் சில்வா, இதனைப்பார்த்துக்கொண்டுதான்சும்மா இருக்கப் போவ தில்லை எனவும் தெரிவித்தார்.

கமல் குணரட்ன, சவேந்திர சில்வா, ஜகத் டயஸ் உள்ளிட்ட படை அதிகாரிகளை யுத்தக் குற்றவாளிகளாக சித்தரிப்பதற்கு சரத் பொன்கோ முயன்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## தமிழ்க் கட்சி...

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் அமுக்க நிலையில் அழுத்தம் கொடுப்பதற்கு தயாராகி வரும் இந்திய மத்திய அரசு ,

கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில்சிலஉத்தரவாதங்களைகேட்டிருந்தது.

13-வது திருத்தச் சட்டத்திற்கு மேலாக தீர்வுவழங்கப்படும்எனவும்;அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ,இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க்கட்சிகளை அழைத்துப் பேசுவதற்கான திட்டங்களை இந்தியா வகுத்துள்ளதாகவும் பி.ரி.ஐ. செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திட்டயோசனைகளை பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான குழுவினர் தயாரித்து வருவதாக மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

இது இவ்வாறு இருக்க,இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளை அழைத்து இந்தியா பேசவிருக்கும் தகவல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் விளக்கம் கோரியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-5)

## பொன்சேகா...

செல்வதா? இல் லையா? என்ற முடிபை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவே தீர்மானிப்பார் என்றும் அவர் கூறினார். (ந-5)

## ஜனாதிபதி தலைமையிலான எமது...

யிலான குழு வினரின் இந்தியப் பயணம் பல வழிகளில் வெற்றி அளித்துள்ளது.

இவ் விஜயத்தில் இந்தியத் தரப்பும் எமது தரப்பும் பல்வேறு விடயங்களைப் பற்றி பேசினோம். இதில் மீள் குடியேற்றம், மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் அரசியல் தீர்வு குறித்து விரிவாகப் பேசினோம்.

நடைமுறை சாத்தியமாக நாம் வலியுறுத்தி வரும் 13ஆவது திருத்தச்சட்டத்துடன் மேலதிக அதிகாரங்களையும் அடங்கிய தீர்வுத்திட்டம் என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. அதனையே ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார்.

இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒத்துக்கொண்டார். அது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இவ் விஜயத்தில் சந்தித்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழக எம்.பிக்கள் குழுவினரிடம் எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தி நாம் பேசிய விடயங்களை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

அத்துடன் அனைவரும் இலங்கைக்கு வந்து எமது மக்களின் நிலையை நேரில் கண்டு கலந்துரையாடுமாறு நானும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

இவ் விஜயத்தின் போது வடக்கு மாகாணத்தில் புகையிரதப் பாதை அமைப்பதற்கு இலகு கடனான 800 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் காங்கேசன் துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு, துரையப்பா விளையாட்டரங்கை சர்வதேச தரத்தில் அமைத்தல், யாழ்ப்பாணத்தில் கலாசார மண்டபம் அமைத்தல் என்ப வற்றுக்கும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

எம்மால் கேட்கப்பட்டதற்கமைவாக வடக்கு மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதியை நன்கொடையாக வழங்க இந்தியப் பிரதமர் உறுதியளித்தார்.

இதனைவிட எம்மால் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்வதற்கென முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை இந்தியத்தரப்பு கொள்கையளவில் ஏற்றுள்ளது.

**எனது விவகாரம்**

இந்தியாவுக்கு நான் சென்றிருந்த வேளை சென்னை உயர் நீதிமன்றில் புகழேந்தி என்ற சட்டத்தரணி என்னை கைது செய்யுமாறு வழக்குத்தாக்கல் செய்தார். அவ் வழக்கு அடுத்த திங்கட்கிழமை வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் பொது மன்னிப்பைப் பெற்ற நான் இவ் விடயத்தை சட்ட ரீதியாக எதிர் கொள்ளத் தயார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட அனைத்துக் கட்சிகளுக்கும் நான் அழைப்பு விடுத்தேன்.

அதாவது தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு நாம் ஒன்றிணைந்து செயல்பட்டு ஒரு கட்டத்திலிருந்து ஆரம்பிப் போம் என்றே இந்த அழைப்பை விடுத்திருந்தேன்.

ஆனால் அது சாத்தியப்படவில்லை. தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் நாளாந்த பிரச்சினைகளை தீர்ப்பதெனக் கூறிக்கொண்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

இதற்குக் காரணம் தமது சுயலாபத்துக்கே. அதாவது, நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கான வேலையென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (ந-5)

## கிளி.அறிவி...

வருகின்றன. இந் நிலையில் வடக்கு மாகாண சபை அலுவலகத்தை கிளிநொச்சி அறிவியல் நகரில் உள்ள கட்டிடத் தொகுதிக்கு மாற்றுவது தொடர்பில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் ஆராய்ந்துள்ளார். (ந-5)


### பொருளியல் கருத்தரங்கு

A/L 2010

பின்வரும் நிறுவனங்களில் பதிவு மேற்கொள்ளலாம்.

- DMI
- Subra (சித்தன்கேணி)
- ACA (இணுவில்)
- Crystal (நெல்லியடி)

18.06.2010 திகதி முதல் பதிவுகள் மேற்கொள்ளலாம்

- 10 வெளியீடுகள் வழங்கப்படும்
- பகுதி 1, 20 தொடக்கம் 27 வரை
- பகுதி11, 06.07.தொடக்கம் 15.07.வரை
- இறுதிப் பரீட்சைகள் 15.07.2010 முதல்

தொண்டைமானாறு பரீட்சைக்கு அமைய நேர அட்டவணை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

(C-410)

By - S.S சிறி(B.Com)


## எரிபொருளின் விலை...

தையில் எரிபொருளின் விலை உயர்வடைந்துள்ள போதிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருப்பில் காணப்படும் எரிபொருட்களுக்கு இந்த விலை யேற்றம் தாக்கத்தை ஏற்படுத்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் நிலவும் தற்போதைய விலையின் அடிப்படையில் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட உள்ளதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் விலையேற்றத்தை மேற்கொள்ள நேரிடலாம் எனவும், எனினும் இன்னும் சில காலங்களுக்கு எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படாதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## ஜனாதிபதி...

கடந்த 8ஆம் திகதி 3 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு புதுடில்லிக்கு சென்றிருந்தார்.

அங்கு மத்திய, தமிழக அர சியல் தலைவர்களைச் சந்தித்து ஜனாதி பதி கலந்துரையாடியிருந்தார். (ந-5)

## பார்வதி அம்மாள் இந்...

தரப்பின் முன் அனுமதியைப் பெற்றே அம்மையாரை பார்வையிட முடியும் என்பன அதில் முக்கியமான நிபந்தனைகள்.

ஆனால் அம்மையார் இந்திய மத்திய அரசின் இவ்விசா கெடுபிடி காரணமாக இலங்கைக்கு திரும்பி வந்துவிட்டார். இந் நிலையிலேயே விசா நிபந்தனைகளை இந்திய அரசு மீள் பரிசோதனை செய்தது.

அதன் பிரகாரம் விசா நிபந்தனைகளை தளர்த்தியுள்ளதாக தற்போது அறிவித்துள்ளது.

அம்மையார் அவருடைய பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் எவ்வித கட்டுப்பாடும் இன்றி தங்கியிருக்க முடியும். ஆனால் எந்தவொரு அரசியல் பிரமுகர்களையும் சந்திக்க முடியாது என்று மத்திய அரசு விளக்கம் தந்துள்ளது.

அத்துடன் இத் தீர்மானம் குறித்து உத்தி யோக பூர்வமான இலங்கையில் உள்ள அதன் தூதரகத்துக் கும் அறியப்படுத்தியுள்ளது.

பார்வதி அம்மாள் மருத்துவ சிகிச்சைக் காக கடந்த ஏப்ரல் மாதம் மலேசியாவில் இருந்துவிமானம்மூலம் இந்தியாவுக் குச் சென்றார். ஆனால் அவர் அங்குதரையிறங்கவ அனுமதிக் கப்படாமல் மீண்டும் மலேசியாவுக்கு திருப்பி அனுப்பப் பட்டார். இலங்கைக்கு திரும்பி வந்த அவர் தற் போது வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ந-5)


### கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய். மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.

(1)யாழ்.போதனா வைத்தியசாலையில் நிபுணத்துவ வைத்திய சேவை புரிந்து கொண்டிருக்கும் பின்வரும் வைத்திய நிபுணர்கள் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கும்,இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கும் வைத்திய நிபுணத்துவ சேவை வழங்குவதற்கு வருகை தந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அறியத்தருகிறேன்.

(I) Dr.S.மருதையினார் ,M.B.B.S.,M.D(Paediatrics) - குழந்தையியல் நிபுணர். சனி மாலை 4.00-5.00 மணி (இரு வைத்தியசாலைகளுக்கும்)

(II) Dr.S. சுகுமாரன் M.B.B.S.,M.D(dermatology) தோல் வியாதி நிபுணர் ஞாயிறு காலை 10.00 மணி -11.00 மணி (இரு வைத்தியசாலைகளுக்கும்)

(2) தேவை

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையிலும்,மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் மருத்துவ சேவை வழங்குவதற்கு M.B.B.S பட்டம் பெற்ற வைத்தியர்கள் அல்லது R.M.O(Registered Medical Officers) தேவைப்படுகின்றனர்.இரவுக் கடமை ,பகல் கடமை,கிழமையில் ஒரு நாளோ ,இரண்டு நாளோ அல்லது சில மணித்தியாலங்களோ எதுவாயினும் விரும்பிய வைத்தியர்கள் விண்ணப்பித்து என்னை நேரில் காணலாம்.

(3)இணுவில் மக்லியோட் வைத்திய சாலையில் பின்வரும் முக்கிய பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படும்.

(I) Electrolytes
(II) Lipid profile
(III) Liver Profile
(IV) G.G.T
(V) SGOT
(VI) Blood grouping typing
(VII) Sputum AFB
(VIII) Troponin I
(IX) U.Micro albumin
(X) HBsAg
(XI) HbAIC

தொலைபேசி:
021 222 2747, 021 222 7669
0776171451, 0772132517

மருத்துவ மேலதிகாரி
Medical Superintendent

(1670)



### பயிற்சிகள்

சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் தொழில்வாய்ப்பை பெறக்கூடிய முறையில் செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

- ஏயர் கொண்டிசனிங்
- Phone Repairing
- ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

பயிற்சிகள் ஆரம்பம்: 12.06.2010

விபரங்களுக்கு :
Jaffna Technical Institute
No. 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P No :- 0718561654, 0779254078, 0212226434

(C-396)



### டீசல் கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 64 – Nissan Doctor Sunny, yom. 1991, Central lock system, power steering கடும் சாம்பல் (Silver Gray) கலர் கார் விற்பனைக்குண்டு. யாழில் நேரில் பார்வையிட முடியும்.

தொடர்புகளுக்கு 0777585913 (C- 402)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.